விலை ரூபா 1-25

தமிழ்நாடு

THE EELANADU

NATIONAL TAMIL DAILY

ஆனி 19 ஷவ்வால் 3 இதழ் 139

செவ்வாய்க்கிழமை 3-7-84

ஜனதிபதி நாடு திரும்பினர்

[கொழும்பு]

மூன்று வாரகால வெளி நாட்டு விஜயத்தை முடித்துக் கொண்டு ஜனதிபதி ஜே. ஆர். ஜெயவர்த்தனு நேற்று மாலை கொழும்பு வந்து சேர்ந்தார்.

கடந்த 13-ம் திகதி உத்தியோகபூர்வ விஜயத்தை மேற் கொண்டு அமெரிக்கா பயண மான ஜனதிபதி, அங்கிருந்து தனிப்பட்ட விஜயத்தை மேற் கொண்டு பிரிட்டனுக்குச்சென் றார். பின்னர் இந்தியப் பிரத தமரின் அழைப்பின்பேரில் புதுடில்லி சென்ற ஜனதிபதி இலங்கைத் தமிழர் பிரச்னை தொடர்பாக அங்கு பேச்சு வார்த்தை நடத்திவிட்டு நேற்றுமாலை 7.30 மணியள வில் கட்டுநாயக்கா விமான நிலையத்தை வந்துசேர்ந்தார்.

'அமிர்' புதுடில்லி செல்கிறார்!

(சென்னை)

தமிழர் விடுதலைக் கூட்டணி செயலதிபர் திரு. அ. அமிர்த லிங்கம் இன்று புதுடில்லிசெல் கிறார்.

இந்தியப் பிரதமரின் விசேட தூதர் திரு. ஜி. பார்த்தசார தியை சந்தித்து பேச்சு வார் த்தை நடத்துவதற்காகவே திரு. அமிர்தலிங்கம் இன்று அவசரமாக புதுடில்லி செல்கி றார்.

காஷ்மீர் சட்டசபை கலைப்பு!

[புதுடில்லி]

ஜம்மு-காஷ்மீர் மாநில சட்டசபை நேற்றுக் கலைக்கப்

[8-ம் பக்கம் பார்க்க]

இந்திரா-ஜே. ஆர். பேச்சுக்கள் இலங்கையிலும் தொடரும்!

சர்வகட்சி மாநாட்டில் சுமுகமான முடிவுகள்?

கூட்டணி கலந்துகொள்வதன் அவசியம்பற்றி வலியுறுத்து

(நமது வெளிநாட்டுச் செய்திச் சேவை)

லங்கைத் தமிழர் பிரச்னைக்கு தீர்வுகாண்பது தொடர்பாக இந்தியப் பிரதமர் திருமதி இந்திராகாந்தியுடன் நடத்திய பேச்சுவார்த்தை யின் போது சில முக்கிய யோசனைகள் குறித்து ஆராயப்பட்டபோதி லும் அவை பற்றிய விபரங்களை வெளியிட இலங்கை ஜனதிபதி திரு. ஜே. ஆர். ஜெயவர்த்தனு மறுத்துவிட்டார்.

ப் பிரச்னைக்கு தீர்வுகாண்பது தொடர்பாக கொழும்பில் சர்வகட்சி மாநாடு தொடர்ந்து நடைபெறவுள்ள அதேவேளையில், இலங்கை ஜனதிபதியுடன் பேச்சுவார்த்தை நடத்துவதற்காக இந்தியப் பிரதமர் திருமதி இந்திரா காந்தி மிக விரைவில் இலங்கைக்கு விஜயம்செய்யவுள்ளார்.

ரண்டாவது தடவையாக நேற்றுச் சந்தித்து மூன்றும் சுற்று பேச்சுவார்த்தைகளை நடத்திய திரு. ஜெயவர்த்தனுவும் திருமதி காந்தியும் பிரச்னைக்கு தீர்வு காண்பதற்கான வழிவகைகள் குறித்து நீண்டநேரம் ஆராய்ந்தனர்.

நற்றுப் பிற்பகல் புதுடில்லியிலிருந்து கொழும்பு புறப்படுவதற்குமுன்னர் பத் நிருகையாளர் மாநாடு ஒன்றில் திரு. ஜெயவர்த்தனு கலந்துகொண்டார்.

ரச்னைக்கு சுமுகமானதொரு தீர்வுகாண்பதற்காக சர்வகட்சி மாநாட்டில் தமிழர் விடுதலைக் கூட்டணி கலந்துகொள்ளவேண்டும் என்றும் திரு. ஜெயவர்த்தனு அழைப்பு விடுத்துள்ளார்.

(8-ம் பகக்ம் பார்க்க)

நேற்று நடைபெற்ற ஒருநாள் அடையாள வேலை நிறுத் தத்தில் கூட்டுறவு ஊழியர் தொழிற்சங்கத்தை சேர்ந்த யாழ். ப. நோ. கூ. சங்க ஊழியர்களும் கலந்து கொண்டுள்ளதை இங்கு காணலாம்.

கூட்டுறவுஊழியர் வேலைநிறுத்தம் அமைதியாக நடந்தது

(ஏ. வி. மாணிக்கம்)

கூட்டுறவு ஊழியர் வேலை நிறுத்தம் நூற்றுக்கு 99 வீதம் வெற்றியளித்துள்ளதாக கூட் டுறவு ஊழியர் தொழிற்சங்கத் தலைவர் திரு. இரா. லோக நாதன் தெரிவித்துள்ளார்.

கூட்டுறவு ஊழியர் தொழிற் சங்கம் 14 கோரிக்கைகளை முன் வைத்து வடக்கு, கிழக்கு மாகா ணங்களில் நேற்று ஒரு நாள் அடையாள வேலை நிறுத்தம் செய்தது.

வேலை நிறுத்தம் செய்த யாழ். பலநோக்குக் கூட்டுறச்

(8 ம் பக்கம் பார்க்க)

நியூயோர்க் தமிழ் மகாநாடு:

கூட்டுத்தலைமை பிரேரணை ஏகமனதாக நிறைவேறியது

முக்கிய தீர்மானங்களுடன் மாநாடுமுடிந்தது

(நியூயோர்க்கிலிருந்து மாலி)

நியூயோர்க்கில் நடைபெற்ற லகத் தமிழ் மகாநாட்டில்; ங்கைத் தமிழர் பிரச்னை சகல அரசியல் இயக்கங் களும் ஒன்றுபட்டு, ஓர் கூட் டுத் தலைமையின்கீழ் இயங்க வேண்டும் என்ற பிரேரணை பலத்த கரகோஷத்தின் மத்தி யில் ஏகமனதாக நிறைவேற் றப்பட்டது.

நியூயோர்க் 'ஹொலிடே இன்' ஹோட்டலில் கடந்த 30-ம் திகதி ஆரம்பமான மூன்று நாள் உலகத் தமிழ் மகாநாடு, ஒருநாள் முன்ன

(8ம் பக்கம் பார்க்க)

கிளிநொச்சி இலங்கை வங்கி கிளையில் கொள்ளை!

(கிளிநொச்சி)

கிளிநொச்சி இலங்கை வங் கிக் கிளையில் நேற்று முன்தி னம் இரவு சுமார் 11 மணி யளவில் கொள்ளையொன்று நடைபெற்றுள்ளது.

கிளிநொச்சி சென். திரேசா செஞ்சிலுவை சங்கஅம்புலன்ஸ் வண்டியைக் கடத்தியே இக் கொள்ளை நடத்தியுள்ளனராம்.

இலங்கை வங்கிக் கிளையின் பின்பக்க கதவு மூலமாக உள்ளே சென்று காவலா ளியை பயமுறுத்திக் கட்டிப் போட்டுவிட்டு அவரிடமிருந்த திறப்பை எடுத்து அறையில் இருந்த பணப்பெட்டியை அம்புலன்ஸ் வண்டியில் ஏற் றிக் கொண்டு சென்றுள்ளன ராம்.

அம்புலன்ஸ் வண்டி பரந் தன் - முல்லைத்தீவு வீதியில் கைவிடப்பட்ட நிலையில் கிளி நொச்சிப் பொலிசார் மீட் டுள்ளனர்.

இந்தியாவுக்கு விஜயம் ஸெயில்சிங் புதுடில்லி காந்தி சமாதியில் ஜனதிபதி திபதி அருகில் தேசிய பந் சய்த இலங்கை ஜனதிபதி பாலம் விமான நிலையத்தில் ஜெயவர்த்தனு மலர்வளையம் தோபஸ்து அமைச்சர் திரு. ரு. ஜே. ஆர். ஜெயவர்த் வரவேற்பதையும், தமது சாத்தி மரியாதை செலுத்து லலித் அத்துலத் முதலியும் னவை, இந்திய ஜனதிபதி முதல் அலுவலாக மகாத்மா வதையும் காணலாம். ஜனு இங்கு காணப்படுகிறார்.

வரிவிளம்பரம்

விற்பனைக்கு

North Town வெள்ளை, பிறவுண் பேட்டுக் குஞ்சுகள், குறஸ் புறொய்லேஸ் சேவல் குஞ்சுகள் யூலை மாதம் 1ம், 10ம் திகதிகளில் விநியோகிக்கப்படும். ராதா கிருஷ்ணஸ், 392, நாவலர் வீதி, கயிலாசபிள்ளையார் கோவிலடி. 587

Hyline Hisex ஆகிய இன ஒரு நாட் கோழிக்குஞ்சுகள் 6-7-84, 16-7-84, 30-7-84 ஆகிய நாட்களில் எம்மிடம் விற்பனைக்கு உண்டு. விபரங்களுக்கு ''சீமாட்டி பாம்ஸ்'' மயிலங்காடு, சுன்னாகம், சீமாட்டி 122 மின்சார நிலைய வீதி யாழ்ப்பாணம். 620

தேவை

கொன்வென்ட் பாலர் பாடசாலையில் கல்வி பயிலும் ஐந்து வயதுச் சிறுவனுக்கு, சனி, ஞாயிறு, விடுமுறை நாட்களில் காலை நேரத்தில் இரண்டுமணி நேரம் (9-00—11-00) புத்தூரில் உள்ள வீட்டிற்கு வந்து ஆரம்பக்கல்வி கற்பிக்கக் கூடிய பயிற்றப்பட்ட ஆசிரியை தேவை. 30 வயதிற்குட்பட்டவர்கள் விரும்பத் தக்கது. நல்ல சம்பளம் வழங்கப்படும். விண்ணப்பிக்க:- விளம்பர இல. 601, C/o, ஈழநாடு, யாழ்ப்பாணம், 601

பின்வரும் தொழில்களில் அனுபவமுள்ளவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. 1. தையல்வேலை, 2. இனிப்புவகை செய்தல், 3. தும்புவேலை, 4. பிளாஸ்திக் வேலை விபரங்களுடன் தொடர்பு கொள்க: திருமதி த.சுப்பையா நாவற்குழி கைதடி. 648

தவறிவிட்டது

ஜூன் 28ம் திகதி வியாழக்கிழமை (சேவ்றி) கொழும்பு-யாழ்ப்பாணம் 1ம் பஸ்ஸில் அ.சுந்தரம் லக்கேஜில் பதிவு செய்து கொண்டுவந்த 'டெக்' பிரயாணி ஒருவரால் மாற்றப்பட்டிருக்கிறது. ''டெக்கை'' தவறுதலாக எடுத்துச் சென்றவர் கொழும்பு பிரமிட் எயர் சேவிசஸ் லிமிட்டட் ரெலிபோன் 549154 இலக்கத்தில் அல்லதுயாழ்ப்பாணம் நியூசண்முகானந்தா ரெக்ஸ்ரைல்ஸ் ரெலிபோன் 23232 இலக்கத்தில் தொடர்பு கொள்ளவும். 650

கல்வி

வயரிங், மோட்டார்மெக்கானிசம் காலை வகுப்புக்கள் கிழமை நாட்களில் நடைபெறுகின்றன. புதிய மாணவர்கள் 3-7-84ல் சேர்க்கப்படுவார்கள். தொடர்பு கொள்க. பொறியியல் கல்வி நிலையம் (Engineering Education Centre): யாழ்ப்பாணக் கல்விநிலையக்கட்டிடம், சாந்தி சினிமா அருகாமை, 22 ராமையா செட்டியார் லேன், யாழ்ப்பாணம். விரிவுரையாளர்: S. C. இம்மானுவேல் B. Sc (Cey) Elecrtical and Automobile Engineer. 599

SALE

Kachcheri Nallur Road land for sale Title deeds with Nandakumarans Kachcheri Nallur Road, apply Navaratnam 171 B, Groussault Rd, Chundikuli. 646

கல்வி

Spoken English G. C. E. (O/l) ஆங்கில பாடத்திட்டத்திற்கு அமைய உயர்கல்வி பயிலும், மாணவர்களுக்கும் உதவும் வகையிலும் விசேடசித்திபெறக்கூடியதாகவும் சிறப்புப்பட்டதாரி ஆசிரியரினால் கற்பிக்கப்படும் சனி, ஞாயிறு 8-30, — 10-30 வரை. ஆரம்பம் 7-7-84 யாழ்ப்பாணக்கல்வி நிலையம், சாந்தித்தியேட்டருக்கு அருகாமை, யாழ்ப்பாணம். 645

பின்னுறுதிக் கட்டளை பற்றிய அறிவித்தல்

யாழ்ப்பாண மாவட்ட நீதிமன்றத்தில்

மரணசாதனமின்றி மரணமெய்திய நவாலியைச் சேர்ந்த வேலுப்பிள்ளை செல்வரெத்தினம் பெண் லலிதாதேவி என்பவரின் மரணச் சொத்தின் விடயத்தில்

மரணமெய்தியவர் தம்பு கனகரெத்தினம், 30/19, பொன்னாலை

மனுதார்

மரணசாதன நியாயாதிக்கம் } இல: த/3759

1. வேலுப்பிள்ளை செல்வரெத்தினம், நவாலி,
2. செல்வரெத்தினம் சுஜீதரன், பொன்னாலை,
3. செல்வரெத்தினம் விஜிதரன், நவாலி
4. கணபதிப்பிள்ளை கந்தசாமி, மூளாய்

4-ம் எதிர் மனுதார் பராயமற்ற 2-ம், 3-ம் எதிர் மனுதார்களின் வழக்குப் பாதுகாவலர்

எதிர்மனுதார்கள்

மேலே உள்ள இலக்கம் கொண்ட மரணசாதன வழக்கு மேலே பெயர் குறிப்பிடப்பட்ட இறந்து போனவரின் மரணச் சொத்தை நிர்வகிப்பதற்காக மேற்படி நீதிமன்றத்தில் தொடுக்கப்பட்டு, அதில் அதற்கிணங்கப் பின்னுறுதிக்கட்டளை பதியப்பட்டுள்ளதென இத்தால் அறிவிக்கப்படுகிறது.

அக்கறையுள்ள ஆள் எவரும், 1984-ம் ஆண்டு ஆடி மாதம் 13 ஆந் நாளன்று முற்பகல் 9-30 மணிக்கு இந்நீதிமன்றத்தின் முன்னர் தோன்றி அவ்வாறு பதியப்பட்ட பின்னுறுதிக்கட்டளை ஏன் முற்றுன தாக்கப்படலாகாதென்பதற்குக் காரணம் காட்டுமாறு, இத்தால் தேவைப்படுத்தப்படுகின்றீர்.

1984-ம் ஆண்டுவைகாசி 25 -ம் திகதி.

ஆ. குமாரசுவாமி
சித்தங்கேணி,
மனுதாரின்சட்டத்தரணி

நீதிமன்றக்கட்டளைப்படி

கு. குலசிங்கம்
பதிவாளர்.

653

நாளைய நிகழ்சிகள்

(பண்டத்தரிப்பு)

மானிப்பாய் இந்துக் கல்லூரியின் வருடாந்த இல்லமெய்வல்லுனர் போட்டி நாளை புதன்கிழமை கல்லூரி அதிபர் திரு. எஸ். வி. மகேசவேலு தலைமையில் நடை பெறவுள்ளது.

★

(யாழ்ப்பாணம்)

காரைநகர், வலந்தலை ஸ்ரீ கண்ணகை அம்பாள் ஆலய முதலாண்டு மணவாளக் கோலத் திருவிழா நாளை புதன்கிழமை நடைபெறவுள்ளது.

பண்டிதை தங்கம்மா அப்பாக்குட்டியின் சொற்பொழிவும் கலை நிகழ்ச்சிகளும் நடைபெறவுள்ளன.

வருடாந்த மகோற்சவம்

(யாழ்ப்பாணம்)

கைதடி கயிற்றசிட்டி கந்தசுவாமி தேவஸ்தான வருடாந்த மகோற்சவம், இன்று செவ்வாய்கிழமை ஆரம்பமாகிறது. இந்த உற்சவம் 11 தினங்கள் நடைபெற்று இம்மாதம் 11ம் தேதி காலை ரதோற்சவமும், 12 ம்தேதி காலை தீர்த்தோற்சவமும் நடைபெறும். (க)

பின்னுறுதிக் கட்டளை பற்றிய அறிவித்தல்

யாழ்ப்பாணம் மாவட்ட நீதிமன்றம்

வட்டுக்கோட்டை அராலி மேற்கைச் சேர்ந்த காலஞ்சென்ற நாகலிங்கம் தம்பிராசா என்பவரின் மரணசாதன மற்ற மரணச்சொத்துக்களின் விடயத்தில்.

மரணமெய்தியவர்

மரணசாதன நியாயாதிக்கம் } இல. நி/3803

நாகலிங்கம் தம்பிராசா கைம்பெண் தவமணி மே/பா நா. இராஜசுந்தரம், அராலி மேற்கு, வட்டுக்கோட்டை.

மனுதார்

எதிராக

1. தம்பிராசா சுரேஷ் (பராயமற்றவர்)
2. நாகலிங்கம் இராஜசுந்தரம் (பராயமற்ற 1-ம் எதிரி மனுதாரின் பாதுகாவலர்) அராலி மேற்கு, வட்டுக்கோட்டை.

எதிர்மனுதார்கள்

மேலேயுள்ள இலக்கங் கொண்ட மரணசாதன வழக்கு மேலே பெயர் குறிப்பிட்ட இறந்துபோனவரின் மரணச்சொத்தை நிரூபிப்பதற்காக மேற்படி நீதிமன்றத்தில் தொடுக்கப்பட்டு அதில் அதற்கிணங்க பின்னுறுதிக் கட்டளை பதியப்பட்டுள்ளதென இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

அக்கறையுள்ள ஆள் எவரேனும் 1984-ம் ஆண்டு ஆடி மாதம் 6-ந் திகதி முற்பகல் 9-00 மணிக்கு இந்நீதிமன்றத்தின் முன்னர் தோன்றி அவ்வாறு பதியப்பட்ட பின்னுறுதிக்கட்டளை ஏன் முற்றுன கட்டளையாக்கப்படலாகாது என்பதற்கு காரணம் காட்டுமாறு இத்தால் தேவைப்படுத்தப்படுகின்றனர்.

1984-ம் ஆண்டு வைகாசி மாதம் 22-ந் திகதி.

கோட்டுக்கட்டளைப்படி

கு. குலசிங்கம்,
பதிவாளர்.

தயாரித்தவர்;
க. குணரத்தினம்,
மனுதாரின் சட்டத்தரணி.
(651)

2—வது ஆண்டு நினைவஞ்சலி

SINNAMAH MARUTHAPPU NAVALY

திருமதி மருதப்பு சின்னம்மா

தோற்றம்: 22-06-1894
மறைவு: 25-06-1982
திதி: 03-07-1984

என்றும் மறவாத மக்கள், மருமக்கள், பேரர், பூட்டர், உறவினர்.

நவாலி தெற்கு, மானிப்பாய். (649)

வியாபாரம் பெருக விளம்பரம் செய்க

ரூபவாஹினியில் இன்று

மாலை

5-30 ஹெட்ஸ் அன்ட் ரெய்ல்ஸ் சிறுவர் நிகழ்ச்சி (ஆங்கிலம்)
6-00 இசைநிகழ்ச்சி சிங்களம்
6-45 இசை நிகழ்ச்சி
6-55 செய்திகள் (தமிழ்)
7-15 சிங்கள நிகழ்ச்சி
7-45 கோட் ரெட் ஆங்கிலச் சித்திரம்
8-15 செய்திகள் (சிங்களம்)
8-35 கோட்ரெட் தொடர்ச்சி
9-00 டிபரன்ற் ஸ்ரோக்ஸ்
9-30 செய்திகள் (ஆங்கிலம்)
9-50 பிக்வலி (ஆங்கிலம்)
10-30 உலகச் செய்திகள்
10-35 பிக்வலி தொடர்ச்சி
10-50 நிகழ்ச்சிகள் முடிவு

அலங்கார உற்சவம்

(யாழ்ப்பாணம்)

பழமை வாய்ந்த கொழும்புத்துறை மேற்கு ஸ்ரீ பழனியாண்டவர் அலங்கார உற்சவம் நாளை புதன்கிழமை ஆரம்பமாகி தொடர்ந்து 12 நாள்கள் நடைபெறும் உற்சவம் வரும் 15ம் திகதி ஞாயிற்றுக்கிழமை நடைபெறும் சங்காபிஷேகத்துடன் நிறைவு பெறும்.

உற்சவ காலங்களில் மாலை ஸ்பஞ்ச அபிஷேகம், பூசை என்பன இடம் பெறும். (கு)

ஓராண்டு நினைவஞ்சலி

சுப்பிரமணியம் சிவரத்தினம்
(ஆயுர்வேத வைத்தியர்)

தோற்றம்:
21—08—1909

மறைவு:
14—07—1983

அன்பின் திருஉருவாய், அருள் நிறைந்த அறிவில் இருப்பிடமாய், பண்பின் சிகரமாய், பாசத்தில் பிறப்பிடமாய் அடக்கத்தில் ஆலயமாய்க் கருணையின் வடிவமான எங்கள் தலைவா உங்களைப் பிரிந்து ஓராண்டுகள் நிறைந்தும் எமக்கும் தங்களால் ஆறுதல் அடைந்தோருக்கும் உங்கள் பாசத்தின் பிணைப்பு விட்டகலாது. உங்கள் ஆன்ம ஈடேற்றத்துக்காக நல்லைக்கந்தனை இறைஞ்சி வேண்டுகின்றோம்

மனைவி, சகோதரர், மகள், மருமகன், பேரப்பிள்ளைகள், உற்றார் உறவினர்கள்

இணுவில் மேற்கு, இணுவில்,
03-07-1984. (652)

யாழ். மக்களுக்கோர் மகிழ்ச்சியான செய்தி

நீங்கள் வெளிநாடு செல்ல வேண்டுமா?

உங்கள் பிரயாணச் சீட்டுக்களை இன்றே யாழ்நகரிலேயே பதிவு செய்து கொள்ள நீங்கள் நாடவேண்டிய நம்பிக்கையான ஒரே ஸ்தாபனம்

குறேஸ் ட்ரவல் சேர்விசஸ் (பிறைவேற்) லிமிட்டெட்

பிரான்ஸ், இத்தாலி, டென்மார்க் செல்வதற்கான விசா, பயணச்சீட்டுக்கள் மற்றும் சகல ஏற்பாடுகளும் மிகக் குறைந்த கட்டணத்தில் பெற உடனே நாடுங்கள்.

குறிப்பு: டென்மார்க் செல்வதற்கான இருவழி பயணச்சீட்டும், விசா மற்றும் சகல ஏற்பாடுகளும் ரூபா 30,000/-க்கு செய்து கொடுக்கப்படும் மறுவழி பயணச்சீட்டுக்கான பணம் (RETURN TICKET) திருப்பிக் கொடுக்கப்படும்.

Cross Travel Services (Pte) Ltd.

STAGE II, MODEL MARKET
No, 5, 1st FLOOR
BUS STAND CENTRE ROAD,
JAFFNA.

Phone No : 22040, 22065. TELEX No. 2207 (C. T. S) C E

இன்று மகத்தான திறப்பு விழா!

SHOBA

SHOBA REFRESHMENT CENTRE

சுன்னகத்தில்

இன்று மாலை 5 மணிக்கு

மாவட்ட நீதிபதி

திரு. க. வி. விக்னேஸ்வரன் அவர்களால்

மங்களகரமாகத் திறந்துவைக்கப்படுகிறது

நண்பர்களையும், ஆதரவாளர்களையும் அன்புடன் அழைக்கிறோம்.

இந் நிலையம்,

ஷோபா ஏஜென்சீஸ் லிமிற்றெட்

ஸ்தாபனத்தாரின் மற்றுமொரு தரமுயர்ந்த சேவை.

- பிறிமா பாண் (PRIMA BREAD)
- ELEPHANT HOUSE ஐஸ் கிறீம் (பல சுவைகளில்) ஐஸ் சொக், பழச்சாறுகள்.
- கேக் வகைகள்
- PUDDINGS
- இனிப்பு வகைகள்
- தயிர் (ரூபா 2/- முதல் 5/50 வரை)
- பலவகையான குளிர்பானங்கள்
- பற்றீஸ், கட்லற், ரோல்ஸ்
- YOGHURT
- மற்றும் பலவிதமான சிற்றுண்டிகள்

சௌகரியமான, ஆசன வசதிகளுடன் கூடிய, வித்தியாசமான சூழலில் சிறுபொழுதை னிமையாகக் கழிக்கவும் உயர்தரமான சிற்றுண்டி வகைகளையும் மென்பானங்களையும் சுவைத்து மகிழவும் வருக தாருங்கள்!

உங்கள் விருந்தினர்களை உபசரிக்கவும், உங்கள் வைபவங்களைச் சிறப்பிக்கவும் தேவையான சிறந்த சிற்றுண்டி வகைகளையும், குளிர்பானங்களையும் எம்மிடம் நியாய விலையில் பெற்றுக்கொள்ளுங்கள்.

ஞாயிற்றுக்கிழமைகளில் கோழிப் புரியாணி பெற்றுக்கொள்ளலாம்.

[ஓடர்கள் வெள்ளி மாலை 5 மணி வரை ஏற்றுக்கொள்ளப்படும்]

திறந்திருக்கும் நேரங்கள்: தினமும் காலை 7 மணி முதல் மாலை 7 மணி வரை.

[சுன்னகம் சந்தியிலிருந்து காங்கேசன்துறைப் பக்கமாக 600 யார் தூரத்தில்]

AVAILABLE AT OUR ONE - STOP - SHOP

ALL ELEPHANT HOUSE PRODUCTS INCLUDING
BROILERS, BACON, SAUSAGES, PORK, CURRY CHICKEN,
ICE CREAM (IN GALLONS AND FAMILY BLOCKS).
L. P. GAS AND GAS COOKERS

- ALL OF YOUR DAILY HOUSEHOLD REQUIREMENTS UNDER ONE ROOF
- CONVENIENT SHOPPING
- PICK THE ITEMS YOURSELF
- PAY A REASONABLE PRICE

Special Chicken Buriyani available on Sundays only. Orders will be accepted before 5 P. M. on Fridays.

SHOBA AGENCIES LTD.,

194, K. K. S. Road, Chunnakam.

மணிவாக்கு

இலட்சியங்கள் தாரகைகள் போன்றவை. அவை களைக் கைக்குள் அடக்கிவிட முயன்றால் தோல்வி நிச்சயம். ஆனால் அவைகளை வழிகாட்டிகளாகக் கொண்டு பின்தொடர்ந்து சென்றால் போக வேண்டிய இடத்தை அடைவது உறுதி.

—கார்ல்ரூஸ்

நமது நோக்கு

அமைதிக்கு உதவும் அநுராதபுர சந்திப்பு

எதிர்க்கட்சித் தலைவர் அனுரா பண்டாரநாயக்கா இடம்பெறுத எதிர்க்கட்சித் தலைவர்கள் நால்வரின் அநுராதபுர சந்திப்பு கருத்து நிறைந்தசம்பவமெனலாம்.

'மார்க்ஸிய வாதிகளால் இந்த நாட்டின் அமைதி கெடுகிறது'' என்ற சத்தம் பிரதமர் சேர்ஜோன் கொத்தலாவலையின் ஆட்சியில் அமளியாகக் கேட்டது.

மார்க்ஸிய வாதத்துக்கு எதிர்ப்புத் தெரிவிக்கும் இயக்கங்களுக்கும், தலைவர்களுக்கும் பிரதமர் சேர் ஜோன் பேராதரவு அளித்தமையால் பல சாதாரண நபர்கள் அவ்வாறு நடித்து பலன் பெற்றதாகக் கருதப்பட்டது.

சுமார் முப்பது வருடங்களுக்குப்பின் இத்தத்துவம் பற்றி இவ்வாறு நினைப்பவர்கள் இதனைக் கட்சி ரீதியில் எதிர்க்கும் தீவிர அரசியல் வாதிகளாகவே இருக்கலாம்.

இன்று மார்க்ஸியவாத பெருந்தலைவர்கள் இந்நாட்டின் ஆட்சியில் இடம் பெற்றவர்கள் பாராளுமன்ற அங்கத்தவர்களாக, சிரேட்ட அமைச்சர்களாக திருமதி பண்டாரநாயக்கவின் ஆட்சியில் பணிபுரிந்தவர்கள்.

1977-ல் நடைபெற்ற பொதுத் தேர்தலில் தோல்வியடைந்ததால் இவர்கள் செல்லாக்காசுகளென்றோ, தீவிரவாதிகளென்றோ எடுத்த எடுப்பில் கரிபூசிவிடுதல் தகாத காரியம்.

பொதுத்தேர்தல் வரும்போது 'ஆத்திரமடைந்தவர்கள்' வாக்களிப்பது சகஜம். இந்தியாவின் இந்திராகாந்தியை வீட்டுக்கனுப்பிய பாரததேசம் இரண்டு வருடத்தில் திருப்பி அழைத்தது தெரிந்தவிடயம்.

கடந்த வருடம் நடந்திருக்க வேண்டிய பொதுத் தேர்தல் நடைபெற்றிருந்தால் அன்று தோல்லியடைந்த பெருந்தலைவர்கள் பாராளுமன்றம் வந்திருக்கலாம்.

எனவேஇன்றுஎதிர்க்கட்சி பலவீனப்பட்டு, திறமை அனுபவம் அற்று நாட்டு மக்களின் கருத்துக்களை உண்மையாகப் பிரதிபலிக்கும் சக்திவாய்ந்ததாகக் காணப்படவில்லை.

இந்த உண்மை அனுராதபுரத்தில் பிரதமர் பிரேமதாசாவைச்சந்தித்த நான்கு எதிர்க்கட்சித் தலைவர்கள் எடுத்துரைத்த ஆலோசனைகளில் தெளிவாகிறது.

பொறுப்புவாய்ந்த முறையில் நாட்டில் எழுந்திருக்கும் நெருக்கடியை எவ்விதத்திலும் துர்ப்பிரயோகம் செய்யாது, பல்கலைக்கழகப் பிரச்னையை எவ்வாறு தீர்க்கலாம் என்ற பெருநோக்குடன் பிரதமரைச் சந்தித்த எதிர்க்கட்சித் தலைவர்களை நாம் பாராட்டவேண்டும்.

பேராதனைப் பல்கலைக் கழகத்தில் நிரந்தரமாக இருந்துவரும் பொலிஸ் நிலையம் அகற்றப்படவேண்டும்; பல்கலைக்கழகக்கட்டுப்பாடு, உபவேந்தர், ஆசிரியர்குழாம் மாணவர் தொடர்பை நெறிப்படுத்துவதால் நிலை நாட்டப்பட வேண்டும்; அப்பாவி மாணவர்கள் தடுப்புக்காவலிலோ, விளக்கமறியலிலோ இருப்பதை நீக்கி விடுதலைசெய்யப்பட வேண்டும்; நடந்த சம்பவங்களுக்கு அத்திபாரமான அடிப்படைக் காரணங்களை ஆராய்ந்து அறிக்கை சமர்ப்பிக்க ஒரு பாரபட்சமற்ற குழு நியமிக்கப்படல் வேண்டும். இந்நான்கு கோரிக்கைகளை தெளிவுபடுத்தி நடவடிக்கைகளைத் துரிதப்படுத்தவேண்டுமென்ற தொனி மக்கள் அபிலாஷைகளைப்பிரதிபலிக்கிறதென்பதில் எவ்வித ஐயமுமில்லை.

இந்த நெருக்கடியைப் பயன்படுத்தி நாட்டைச் சீர்குலைக்கவேண்டாமென்று பந்தோபஸ்த்து அமைச்சர் விடுத்த எச்சரிக்கை நிச்சயம் இந்நான்கு கட்சிகளுக்கும் பொருந்தும் என்று எவரும் நினைக்கமாட்டார்.

நாட்டுக்கு ஆபத்தான காலத்தில் ஆட்சியும் எதிர்க்கட்சியும் ஒற்றுமைப்படும் அவசியம் பாராளுமன்றப் பண்பு மட்டுமல்ல, நாட்டின் பாதுகாப்புக்கு இன்றியமையாதது.

சாதாரண காலத்தில் நடைபெறும் போட்டியும் ஏச்சுப் பேச்சும் இன்று உதவாது. உடனடிநடவடிக்கைகள் இவ்விதஆலோசனைகளை மதித்து எடுக்கப்படுவதால், பல தப்பபிப்பிராயங்களும் அசம்பாவிதங்களும் தவிர்க்கப்படும்.

இன்று மாணிக்கவாசகர் குருபூசை

மனிதரை ஆட்கொண்ட வள்ளல்

தேன்பழச் சோலை பயிலும் சிறு குயிலே இது கேள் நீ
வான்பழித்து இம் மண்புகுந்து மனிதரை ஆட்கொண்ட வள்ளல்
ஊன்பழித்து உள்ளம்புகுந்து என் உணர்வு அது ஆய
ஒருத்தன் மான்பழித்து ஆண்ட மென் நோக்கி மணாளனை நீ வரக் கூவாய்

கி. வா. ஜகந்நாதன்

குயிலைப் பார்த்து மாணிக்கவாசகர் பேசுகிறார். அது வடிவத்திலே சிறிதாக இருந்தாலும் இனிதாகப் பாடும் தன்மையுடையது. தேன் நிறைந்த பழங்கள் உடைய சோலைகளில் உலாவுகின்றதன்மையுடையது அத்தகைய குயிலே, நான் சொல்வதை நீ கேட்பாயாக என்று சொல்லத் தொடங்குகிறார்.

தேன்பழச் சோலை பயிலும் சிறு குயிலே இது கேள் நீ.

இறைவன் எல்லவற்றையும் தந்தருளுகின்றவள்ளல். அவன் வானத்தில் இருந்தாலும் அங்குள்ள தேவர்களிடத்தில் அவனுக்கு ஈடுபாடு இல்லை. வானத்தைப்பழித்துவிட்டு இந்த மண்ணுலகத்தில்எழுந்தருளுகிறான். இங்கேயுள்ள அடியார்களாகிய மானிடர்களைஆட்கொள்கிறான்

வான்பழித்து இம் மண் புகுந்துமனிதரைஆட்கொண்ட வள்ளல்

என்உடலை விட்டுவிட்டு என் உள்ளத்திற்குள் புகுந்திருக்கிறான். என்னுடைய உணர்வே அவனுக இருக்கிறான். அவனுக்குச் சமானமாகிய வேறு ஒருவன் இல்லை.

ஊன்பழித்து உள்ளம்புகுந்து என் உணர்வு அது ஆய ஒருத்தன்.

அந்தப்பெருமானுடை திருத்தேவிமெல்லிய நோக்கைஉடையவள் அந்தப்பார்வைமானினுடைய விழியைப் பழித்து விளங்குகிறது. அந்த பெருமாட்டியின் மணாளனுகிய சிவபெருமான் மாணிக்கவாசகரை ஆண்டவன் அவனே வரும்படியாகக் கூவுவாயாக என்கிறார். 'இது என்று சொன்னது. ஆண்டவனைப் பற்றிச் சொல்கிறேன் அதனைக் கேட்பாயாக என்றபடி தேவலோகத்தில் ஆண்டவனுக்கு அருகில் இருந்தாலும் அவனுடைய பெருமையைத் தேவர்கள் அறிந்து கொள்வதில்லை. ஆதலின் 'வான் பழித்து' என்றார். இந்த மண்ணுலகத்திலுள்ள அடியார்கள் இறைவனிடத்தில் உண்மையான அன்பைச் செலுத்துபவர்களாதலின் அவர்களை ஆட்கொள்கிறான். ஆதலால் 'வான் பழித்து இம் மண் புகுந்து மனிதரை ஆட்கொண்ட வள்ளல்'

''தேனும் பழமும் நிறைந்த சோலையில் உலாவுகின்ற சிறிய குயிலே, நான் சொல்லும் இதனைக் கேட்பாயாக வானைப் பழித்துவிட்டு, இந்த மண்ணுலகத்தில் எழுந்தருளித் தன்னுடைய பக்தர்களை ஆட்கொள்ளுகின்ற வள்ளல் என்னுடைய உடம்பைப் பழித்து உள்ளத்திற்குள் புகுந்து என் உணர்வே மயமான தனிச் சிறப்பு உடையவன் சிவபெருமான். மானினுடைய கண்ணைப் பழித்து விளங்குகின்ற கண்ணையுடைய வள் ஆகிய மெல்லிய நோக்கைப் படைத்த உமாதேவியாருடைய அந்த மணவாளனை இங்கே வரும்படியாக கூவுவாயாக.''

சோலை வளம்சிறந்தது. ஆதலின் தேனும் பழமும் நிறைந்திருக்கிறது. குயில் வேறு மரங்களுக்குச் செல்லாமல் பழங்கள் நிறைந்த சோலையில்தங்குவது. 'இது என்று சொன்னது. என்கிறார். வேறு யாரும் கொடுக்க முடியாத உயர்ந்த பொருளைக் கொடுப்பவன் ஆதலின், எல்லாவற்றிலும் சிறந்த முக்தியைத் தருபவன் ஆதலின் வள்ளல் என்றார். 'இந்த உடம்பினுல் எதுவும் பயன் இல்லாமையினுல் இதனை விட்டுவிட்டு என்னுடைய உள்ளத்தில் புகுந்தான்.'' மணிவாசகப் பெருமான் எப்போதும் ஆண்டவனைத் தம் உள்ளத்துள் தியானிக்கிறவர். அதைத் தம்முடைய செயலாகச்சொல்லாமல் இறைவன் செயலாக வைத்து 'உள்ளம் புகுந்து' என்கிறார். உள்ளம் உணர்ச்சிமயமானது. உலகத்திலுள்ள பொருள்களைக் கண்டு அவற்றில் ஆசைக் கொண்டு உணர்ச்சி பெறுவது சாமானிய மனிதர்களின் இயல்பு. மாணிக்கவாசகர் இறைவனையே எண்ணி, தியானித்து அப்போது உண்டாகின்ற

(8ம் பக்கம் பார்க்க)

ஆரோக்கியமான வாழ்வுக்கு வித்திடும் சுகாதார வாரம்

செல்வி. கணபதிப்பிள்ளை

பிள்ளைகளின் தேகாரோக்கியமே நாளைய செல்வம் என்ற உயரிய குறிக்கோளை மையமாகக்கொண்டு நேற்று ஆரம்பமாகியுள்ள சுகாதார வாரம் கொண்டாடப்படவேண்டும் என்பது சுகாதார அமைச்சின் வேண்டுகோள். நாட்டுமக்களின் அத்தியாவசிய தேவைகளில் இன்று சுகாதார சேவை முன்னணி வகிக்கிறது.

இரண்டாயிரம் மக்களுக்கு ஒரு மருத்துவ கண்காணிப்புக் குழு என்ற செயன்முறை அமைப்பை நடைமுறைப்படுத்த சர்வதேச ஸ்தாபனங்களின் உதவியுடன் திட்டங்கள் மேற்கொள்ளப்படுகின்றன. இதன்மூலம் சமூகத்தில் கீழ் நிலையிலுள்ள எல்லாவித மக்களும் ஆரோக்கிய வாழ்வு வாழவைப்பதே அரசாங்கத்தின் சிறப்பான திட்டம். இந்தவகையில் தேவையான மருத்துவர்கள்; உதவி மருத்துவர்கள்; மருந்தாளர்கள்; தொழில் நுட்ப உதவியாளர்கள்; தாதிகள்; சுகாதாரமேற்பார்வையாளர்கள்; மருத்துவமாது போன்றவர்களை சுகாதார அமைச்சு துரித கதியில் பயிற்சி அளித்துவருகின்றது.

இதன் மூலம் மத்திய மாவட்ட சிராமோதய மண்டலங்கள் மூலம், நோய்த் தடுப்பு முறைகளை கையாள்வதன் மூலமும் சுகப்படுத்துவதன் மூலமும், இந்த சுகாதார கண்காணிப்புக்குழுக்கள் தமது சேவைகளைப் பன்முகப்படுத்தும். குடும்ப நலம் பேணும் நிலையங்கள், சிசு பரிபாலன நிலையங்கள், சனசமூக நிலையங்கள் மற்றும் கிராம மட்டங்களில் மிகவும் கீழ்மட்ட நிலையிலுள்ள அமைப்புகள் ஒன்றிணைக்கப்பட்டு அவற்றின் மூலம் தனி மனிதனின் சுகாதார வாய்ப்புகள் நிச்சயப் படுத்தப்படும்.

இதன்மூலம் 2000-ம் ஆண்டில் அனைவருக்கும் சுகாதார சுபீட்சம் என்ற ஆரோக்கிய சமுதாயத்தை உருவாக்க அரசு எடுத்துள்ள நடவடிக்கையை விரிவுபடுத்தும் வளமான வருங்கால சமுதாயம் உருவாகவும்வழிசமைப்போம்.

வண்ணைர் பண்ணை ஸ்ரீ விசுவேசவிநாயகர் ஆலயம்

யாழ்ப்பாணக் குடாநாட்டின் வண்ணார்பண்ணை வடமேற்கு பகுதியிலேகோவில் கொண்டிருக்கும் ஸ்ரீவிசுவேச விநாயகர் ஆலயம் வண்ணை வடமேற்கு ஐயனார் கோவிலடியில் அமைந்துள்ளது. இப்பிள்ளையார் தோப்புடையவர் என்ற பெயரையும் விசுவேச விநாயகர் பெற்றுள்ளார். நாளும் பொழுதும் அப்பெருமானின் அருள் பெற்றும் உய்யும் அடியவர்கள் கூடி ஆண்டு தோறும் விழா எடுக்கிறார்கள் பத்து நாட்கள் தொடர்ந்து நடைபெறும் இத் திருவிழாக்களுள் சிறப்புடைத்தது கொடியேற்றத் திருவிழாவும் தேர்த் திருவிழாவும் தீர்த்தத் திருவிழாவுமாகும். ஆடி அசைந்து அழகாக ஊர்ந்து செல்லும் தேரின் தலைவனுக எழுந்தருளும் விநாயகப் பெருமானின் பேரருளைப் பெறப் பேரெண்ணிக்கையில் அடியவர்கள் கூடுகிறார்கள். தேர்த் திருவிழாக் காட்சியில் மெய் மறந்தும், நிலைமறந்தும் இறைவன் துணை நினைந்தும், அருள் நினைந்தும் மகிழ்வெய்தி மனநிறைவுபெறுகிறார்கள். இவ்வருடம் ஜூலை மாதம் 3ம் திகதி செவ்வாய்க் கிழமை கொடியேற்றத்துடன் விழா ஆரம்பமாகின்றது.

இவ்விநாயகர் ஆலய வரலாறு மிகவும்பழமையானது. தொன்மையானது. பிள்ளையார் வண்ணை வாழ் மக்களின் இன்னல்களை எந்நாளும் களைந்த வண்ணமே இருக்கின்றார். இக் கோயில் ஆதியில் சிறு ஆலயமாகவே இருந்தது பின்பு இவ் வாலயத்தினை இங்கு வாழ்ந்த இன்றும் வாழ்ந்து கொண்டிருக்கின்ற பல பெரியார்களின் விடாமுயற்சியினுல் சகல வசதியுடன் அமைந்த ஒரு கலைக் கோயிலாக அமைந்துள்ளன-

ஒவ்வொரு நாளும் மூன்று காலப்பூசையும் விநாயக சதுர்

(5ம் பக்கம் பார்க்க)

நாகப்பைங்கிளியே! அருள்வாய் நீயே

இங்கிதமாய் (க்) கும்பமுழுக்காடி அன்பர்
இதயத்து ஏக்கமெலாம் இனிதாய் போக்கி (ச்)
சங்கிதமாய் (ப்) பால்முகந்து சாற்றும்பூசை
தனித்துவமாய் இனித்துவக்கும் தாயே நாகப்
பைங்கிளியே பரமனிடப் பாகத்தானே
பக்தர்களும் சித்தர்களும் பணிந்து போற்றி (ப்)
பொங்கிவரும் கடல் போன்ற கருணை வெள்ளப்
புனலாடி அவர்மகிழ அருள்வாய் நீயே.

கவிஞர். நாக. சண்முகநாதபிள்ளை

லெபனனில் மூன்று தீவிரவாத குழுக்கள் சண்டையை நிறுத்த இணக்கம்!

ஆயுதங்களை ஒப்படைக்கவும் முடிவு

பெய்ரூட், ஜூலை 2

லெபனனில் சண்டையில் ஈடுபட்டு வந்த முஸ்லிம் கிறிஸ்தவ தீவிர வாதப் படைகள் தமது சண்டையை நிறுத்தி, லெபனன் தேசிய இராணுவத்திற்கு கட்டுப்படுவதாக உறுதியளித்துள்ளன.

லெபனனில் முஸ்லிம்கள் வாழும் பகுதியையும், கிறிஸ்தவர்கள் வாழும் பகுதியையும் பிரிக்கும் எல்லைப் பிராந்தியத்தில் தொடர்ச்சியான சண்டையில் ஈடுபட்டுவந்த இரண்டு முஸ்லிம் தீவிரவாதக் குழுக்களும் மிகப்பெரிய கிறிஸ்தவ குழுவும்இந்தஉறுதி மொழியை லெபனன் அரசாங்கத்துக்கு அளித்துள்ளன.

தமது படைகளிடம் நவீன ஏவுகணைகள் ராக்கெட்டுகள் விமானங்கள் மற்றும் ஆயுதங்களை விளக்கிக் கொண்டு தற்போது லெபனனில் அமைக்கப்பட்டிருக்கும் தேசிய இராணுவத்திற்கு கட்டுப்படுவதற்கு இந்த மூன்று குழுக்களும் முழு அளவில் இணங்கியுள்ளன.

பெய்ரூட்டில் தொடர்ச்சியான சண்டைகள் இடம்பெறுவதற்கு இந்த மூன்று தீவிரவாதக் குழுக்களுமே முக்கிய காரணமாகவிருந்தன. இந்தப் படை தற்போது லெபனன் தேசிய இராணுவத்திற்கு கட்டுப்படுவதற்கு இணங்கியிருப்பது லெபனனில் அமைதியை ஏற்படுத்துவதற்கான பிரதமர் ரஷித் கராமியின் முயற்சிக்கு கிடைத்த வெற்றியாகும் எனக் கருதப்படுகிறது.

இதன் மூலம் லெபனனில் அமைதி ஏற்படுவதற்கான வழிகள் தோன்றியுள்ளதாகக் கருதப்படுகிறது.

10 ஆண்டுகளாக நடைபெற்று வரும் உள்நாட்டு யுத்தம், கடந்த ஆண்டு இராணுவத்திலிருந்து முஸ்லிம் கிறிஸ்தவ வீரர்கள் பிரிந்து சென்றதினால் எற்பட்ட குழப்பமும் நீங்குவதற்கான சூழ் நிலைகள் தற்போது பெருமளவில் உருவாகியுள்ளன.

(சூ)

இடமாற்றம்

(பச்சிலைப்பள்ளி)

கிளிநொச்சி மாவட்ட விஞ்ஞான வட்டாரக் கல்வி அதிகாரியாக திரு. எஸ். கமலநாதன் இடமாற்றப்பட்டுள்ளார்.

இவர் யாழ் மாவட்ட விஞ்ஞான வட்டாரக் கல்வி அதிகாரியாக இதுவரை பணியாற்றி வந்தவராவார்.

கம்பூச்சியாவிலிருந்து "வியட்னமிய துருப்புக்கள் விரைவில் வெளியேறிவிடும்"

வெளிநாட்டமைச்சர் தகவல்

ஹனோய், ஜூலை 2

"கம்பூச்சியாவில் தற்போது நிலைகொண்டிருக்கும் சகல வியட்னமியத் துருப்புக்களும் படிப்படியாக வாபஸ் பெறப்படும்" என்று வியட்னமிய வெளிநாட்டமைச்சர் தெரிவித்துள்ளார்.

வியட்னமிய வெளிநாட்டமைச்சர் அசில இந்திய வானொலியின் கிழக்காசிய நிருபருக்கு அளித்த விசேட பேட்டியில் இதனைத் தெரிவித்துள்ளார்.

"கம்பூச்சியப் படைகளுக்கு ஆதரவாகவே வியட்னமியத் துருப்புக்கள்அங்கு நிலைகொண்டிருக்கின்றன. கம்பூச்சிய இராணுவம் படிப்படியாக பலமடைந்து வருகிறது. இந்த இராணுவம் தமது நாட்டைப் பாதுகாத்துக் கொள்ளும் சக்தியைப் பெற்றவுடன் சகல வியட்னமியத் துருப்புக்களும் அங்கிருந்து வெளியேறிவிடும். கம்பூச்சிய இராணுவத்தைப் பலமடையச் செய்வதே வியட்னமியத் துருப்புக்களின் நோக்கமாகும்" என்றார்.

சீனா, வியட்னம் எல்லைத் தகராறு குறித்து குறிப்பிட்ட அமைசசர் "வியட்னமின் 5 குன்றுப் பகுதிகளை சீனா கைப்பற்றிக் கொண்டு வியட்னமியப் பிரதேசத்தில் தொடர்ந்தும் துப்பாக்கிப் பிரயோகம் செய்து வருகிறது. இதனால் எப்போதுமே இந்தப் பிராந்தியத்தில் சண்டைகள் தோன்றுவதற்கான வாய்ப்புக்கள் காணப்படுகின்றன. வியட்னம் சீனா மற்றும் அயல் ஆசிய நாடுகளுடன் நட்புடன் இருக்கவே விரும்புகிறது" என்றும் அமைச்சர் தெரிவித்தார்.

வியட்னம் ஆதரவுடன் ஹெங்சமர் ஆட்சி கம்பூச்சியாவில் ஏற்பட்டதைத் தொடர்ந்து வியட்னமியத் துருப்புக்கள் அங்கு நிலைகொண்டிருக்கின்றன.

இன்றைய வானலையில்

காலை

5-30 நாதாஞ்சலி
5-35 திருமுறைப் பாடல் கௌரீஸ்வரி ராஜப்பன்
6-00 சைவநற்சிந்தனை
6-05 இஸ்லாமிய நற்சிந்தனை
6-10 அறநெறி ஆரம்
6-30 செய்திகள்
6-50 மெல்லிசைப் பாடல்
6-55 போதி மாதவனின் போதனைகள்-தனகரட்னம்
7-00 புல்லாங்குழல் - நீலா சகுந்தமணி
7-30 மாகாணச் செய்திகள்
7-35 இசையமுதம்
8-05 வாத்தியமஞ்சரி
8-15 முஸ்லிம் நிகழ்ச்சி

மாலை

6-00 செய்திகள்
6-15 புராணபோதம் 'கந்த புராணத்துள் திருச்செந்தூர்' - நா. முத்தையா
6-30 மெல்லிசைப் பாடல்கள்
6-45 கிறிஸ்தவ நிகழ்ச்சி -சாம் போல்
7-00 களத்துமேடு
7-15 முகத்தார் வீட்டில்
7-30 உலகச்செய்திகள்
7-40 நாட்டுப் பாடல்
7-45 குரல்வளை
8-00 முஸ்லிம் நிகழ்ச்சி
9-00 செய்திகள்
9-10 செய்தியின் பின்னணியில்
9-30 வீணை - எஸ். ஸ்ரீதாஸ்

வண்ணார்பண்ணை

(4-ம் பக்கத் தொடர்ச்சி)

த்தி விழா, வருடப்பிறப்பு விழா, சங்காபிஷேகம், நவராத்திரி விழா, சர்வாலயதீபம் விநாயக சஷ்டி விரதம், திருவெம்பாவை, தைப்பொங்கல் தைப்பூசம் போன்றனவும்இன்னும் விஷேடமாக ஒவ்வொரு வெள்ளிக்கிழமைகளிலும் கூட்டுப் பிரார்த்தனை நிகழ்த்தப்படுகிறது, உபயம்செய்பவரும் வழிபடுபவரும் ஸ்ரீ விசுவேச விநாயகப் பெருமானின் அருள் தமக்கு உதவுவதை அனுபவித்து அநுபவித்து மேலும் மேலும் பக்தியுடையவர்களாய் விளங்குகிறார்கள் (ப)

வண்ணை- ப,கணேசலிங்கம்

"சோவியத் நூல்களை வாசிப்பதனால் சர்வதேசரீதியான விளக்கம் ஏற்படுகிறது"

(ஊரெழு)

"சோவியத் யூனியன் அக்டோபர் புரட்சிக்குப் பின்னர் கல்வி, பொருளாதாரம் போன்ற துறைகளில் சிறப்பான வளர்ச்சி பெற்றுள்ளது. அங்கு வருடந்தோறும் வெளியாகும்லட்சக்கணக்கான நூல்கள் இதற்குச் சான்றுக உள்ளன. இன்று உலகில் பல இன மக்கள் சமாதானமாகவாழும் ஒரு சிறந்த நாடாக விளங்கும் சோவியத் யூனியனில் உள் நாட்டு எழுத்தாளர்களின் நூல்கள் மட்டுமன்றி பிறநாட்டவர்களின் நூல்களும் வெளியிடப்படுகின்றன இந்நூல்களை வாசிப்பதன் மூலம் சர்வதேச ரீதியான ஒரு விளக்கம் ஏற்படுகிறது."

இவ்வாறு சுன்னாகம் (பட்டினசபை) பொதுசன நூல்நிலைய மண்டபத்தில் நடைபெற்ற மக்கள் பிரசுராலயத்தின் நூல் கண்காட்சியையும், விற்பனையையும் ஆரம்பித்து வைத்துப் பேசிய இலங்கை - சோவியத் நட்புறவுச்சங்க யாழ். மாவட்டக்கிளைத் தலைவரும்,முன்னாள் மானிப்பாய் தொகுதி பாராளுமன்ற உறுப்பினருமான திரு. வி. தர்மலிங்கம் கூறினார்.

மேற்படி நூல் கண்காட்சி வைபவத்திற்கு தலைமை வகித்த மக்கள் பிரசுராலய யாழ். கிளைப்பிரதிநிதி திரு. எஸ். விஜயானந்தன் பேசுகையில் "இவ்வாறான கண்காட்சிகள் மூலம் நூல்களைப் பற்றிய அறிவு பொதுமக்கள் மத்தியில் வளரக் கூடியதாக இருக்கிறது" என்றார். இந்தக் கண்காட்சி வைபவத்தில் நன்றியுரை வழங்கிய இலங்கை கம்யூனிஸ்ட்கட்சி மானிப்பாய் கிளைச் செயலாளர் திரு. கே. திருநாவுக்கரசு தமது உரை அழியாத செல்வமாக காலாதி காலம் நிலைத்திருப்பவை நூல்களே" என்று குறிப்பிட்டார்.

நாவலர் வித்தியாலயத்தில்

(யாழ்ப்பாணம்)

மணிவாசகரின் குரு பூஜை வண்ணார்பண்ணை நாவலர் வித்தியாலயத்தில் இன்றைய தினம் வெகு சிறப்பாக கொண்டாடப் படுகிறது.

நாவலர் பெருமனின் அடியார் கோவிலில் விஷேட அபிஷேகம், பூஜை ஆகியவற்றுடன் விழாஆரம்பமாகும். நாவலர் பாடசாலை மாணவர்களுக்கிடையே நடைபெற்ற பேச்சுப் போட்டி' திருவாசக மனனப் போட்டி ஆகியவற்றில் வெற்றி பெற்றவர்களின் நிகழ்ச்சிகளோடு பரிசளிப்பும் நடைபெறும்.

சிறப்பு நிகழ்ச்சிகளாக திரு எஸ். ஞானசேகரம், வைத்திய கலாநிதி. திரு. நா. கனகரத்தினம் ஆகியோரின் சொற்பொழிவுகளும், மாணவ மாணவிகளின் கலை நிகழ்ச்சிகளும் நடை பெறும்.

பண்ணிசைப் புலவர் திரு வே. சிவஞானம் திருவாசக இன்னிசை வழங்குவார் மகேஸ்வர பூஜையும் நடைபெறும்

இன்று

(வண்ணார்பண்ணை)

நீர்வேலிகந்தசுவாமி தேவஸ்தானத்தின் ஆதவிரல் இன்று செவ்வாய்க்கிழமை மாணிக்க வாசக சுவாமிகளின் குருபூசை சிறப்பாக நடைபெற ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

மேற்படிதேவஸ்தானமண்டபத்தில் நடைபெறும் இப்பூசை ஈழநல்லூர் உதயகுமார் குழுவினரின் மங்கள இசையுடன் ஆரம்பமாகின்றது. ஆலய பஜனைக் குழுவினரின் பண்ணிசை நிகழ்ச்சிகளும்,பூசைவழிபாடும் ஆத்மஜோதி நா. முத்தையாவின் சிறப்புச் சொற்பொழிவும் இடம்பெறவுள்ளன.

சிறுப்பிட்டி ஆலய உற்சவம் இன்று

(யாழ்ப்பாணம்)

சிறுப்பிட்டி செல்லப்பிள்ளையார் வருடாந்த மஹோற்சவம் இன்று நடைபெறும். கொடியேற்று விழாவுடன் ஆரம்பமாகிறது. கடந்த இரண்டு மாத காலம் நடைபெற்று முடிந்துள்ளது கந்தவேள் திருக்காதையின் தமிழ் செய்யுள் படனம் பூர்த்தி கடந்த வாரம் இடம்பெற்று முடிந்துள்ளது.

கொடியேற்று விழாவை ஆலய வைதீக சைவ சிவாச்சாரியர் ஆவதோர்த்தாரண சந்திரசேகரர் நடாத்திவைப்பார்.

செய்தித் தணிக்கை

அவசரகாலச்சட்டம் 14 (1) விதிகளுக்கு அமைய பின்வரும் விஷயங்களை பத்திரிகையில் பிரசுரிப்பதற்கு முன்னர் ராஜாங்க அமைச்சின் செயலாளரின் அனுமதியைப் பெறவேண்டும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

- பயங்கரவாதத்துடன் தொடர்புடைய வன்செயல் பற்றிய நடவடிக்கைகள்.
- கொள்ளை மற்றும் அரசாங்க தனியார் சொத்துகளுக்கு சேதம் விளைவித்தல் — தாக்குவோர்— ஆயுதம் தாங்கியவர்களாக இருந்தால்.
- பாதுகாப்புப் படையினர் மேற்கொள்ளும் பயங்கரவாத தடுப்பு நடவடிக்கைகள் அல்லது பயங்கரவாத நடவடிக்கைகள் பற்றிய விசாரணைகள்.
- கொழும்பில் இஸ்ரேல் நலன்காப்புப் பிரிவு ஏற்படுத்துவதற்கும் அல்லது பாதுகாப்புச் சேவை மற்றும் பொலிஸ் பயிற்சிக்காக எவரிடமாவது உதவி கேட்டலுக்கு எதிரான ஆட்சேபங்கள்.
- தேசிய ஒற்றுமையும் சட்டத்தையும் அல்லது சமூகத்திற்குத் தேவையான விநியோகம், சேவைகள் போன்றவற்றை பாதிக்கக்கூடிய விஷயங்கள்.

திருமண அழைப்பு

ஹரல் — ஆசீர்வாதம்

மறைந்த வணக்கத்துக்குரிய R. H. R. ஹரலினதும் ஜீவமணியினதும் புதல்வன்

ஜீவனும்

திரு. திருமதி S. N. ஆசீர்வாதத்தினது புதல்வி

துஷ்யந்தியும்

நல்லூர் பரி. யாக்கோபு ஆலயத்தில் நாளை 1984 ஜூலை 4-ந் திகதி பிற்பகல் 4-30 மணிக்கு திருமணம் செய்துகொள்வர்.

உற்றார் உறவினரை அன்புடன் அழைக்கிறோம்.

88, செம்மணி வீதி, நல்லூர்.

15/7, கிளிவர் வீதி, கொள்ளுப்பிட்டி.

(659)

நெஸ்டோமோல்ட்

நெஸ்கியூரிற்றி பெக்ட்

போட்டியில் பரிசு பெறுவோருக்கு, எமது வாழ்த்துக்கள்.

1ம் பரிசு
வாழ்நாள் முழுதும்
மாதம் தோறும் ரூ.1000
(அல்லது இப்போதே ரூ. 100,000 ரொக்கம்)
சுகததாச அத்தநாயக்கா.
இகல மலகனெ, மலகனெ, குருநாகல்.



விலை ரூ 41.90

2ம் பரிசு
வாழ்நாள் முழுதும்
மாதாந்தம் 500 ரூபாய்
(அல்லது உடனடியாக
50,000 ரூபாய்)
என். பி. செனிவிரத்தின
760, ஹல்லொக் வீதி,
தொழும்பு 6

மூன்று 3ம் பரிசுகள்
ரூ. 15,000
பெறுமதியான
தங்கச் சங்கிலிகள்.
(அல்லது ரொக்கப்
பணம்)
திருமதி. நந்தா
கோமன்கொட
இல. 51, தெனியாய
எஸ் ஞானம்
321, 1ம் பிரிவு, மருதானை.
தர்ஷினி கருணரத்தின
91, பகால கரகாமுன,
கட்டுவத்தை.

100 ஆறுதற் பரிசுகள்
ரூ 250 பெறுமதியான
அமெரிக்கன் ஹோர்ஜட
காரிகள்
(அல்லது ரொக்கப்பணம்)
டெலிசியா விக்கிரமசிங்கா
26/58, பகிரவக்கந்தை, கண்டி
ஜகதசிறி ரோகித
சரசவி ஸ்டோர்ஸ்,
ஒப்பநாயக்கா.
எச் எச். டக்ளஸ் ஹேவாகே
பாதுகாப்புப்பிரிவு,
அரச கினிக் கூட்டுத்தாபனம
ஹிங்குரான.
பி. குணவர்தன
22, கனத்தை வீதி,
நுகேகொட
எச் ஏ எஸ் குமாரசிங்க
80 B, ஜயந்தி மாவத்தை
அனுராதபுரம்.
எச். எச். ஜெயவர்தன
பரணகம, கிரியுல்ல.
தோமஸ் இராசநாயகம்
புனித சவேரியார் வீதி
சாக்கோட்டை அல்வாய்,
யாழ்ப்பாணம்.
வண. நி.ஞானிலக தேரோ
சிறி சரணந்த பிரிவேன,
அனுராத புரம்.

திருமதி. மாலினி கமலத
ரி.ரி.ரி. ஒட்டுத் தொழிற்சாலை
மலியங்கனே.
பேர்சி. ஈ விஜயசூரியா
941/1, கோட்டே வீதி,
கோட்டே.
ஏ. ரெக்ஸ் மகேந்திரன்
2, அரச மாடி, உள்வட்ட வீதி
வவுனியா.
திருமதி. ஐ. இரத்தினயகா
13, சந்தை, கண்டி
கே. எச். அபய குமாரசிங்க
39, கல்கஸ்தொட்ட,
கட்டுநாயகா.
திருமதி. ஆர். எஸ்.
பாலவர்தன
மாவட்ட வைத்தியசாலை
அபபுத்தளை.
எம். ராஜா
வன்னியசிங்கம் வீதி
ஆவரங்கால், புத்தூர்
கே இராஜேந்திரம்
ரடனம்ஸ், சுளிபுரம்.
எஸ். வீ. கே டொரணகம
பதிவாளர் அலுவலகம,
மெடவெல
சுமித் பி. வீதான கமகே
18/5, பிரிவெல வீதி
வெலலம்பிடியா.
சைமன் பண்டிகம
வெபெல்லகே தோட்டம
ஹபராதுவ.
திருமதி. எம். ஜே. எம்
முகைதீன்
தெற்கெலலே வீதி,
காத்தான்குடி 6
ஏ. சற்குணராஜா
சுழிபுரம் மத்தி, சுழிபுரம்
சானக அபயசேகர
44/1, 19வது ஒழுங்கை
கொழும்பு 14.
டி. சி பியசேகர
17பி, மத்துவமாவத்தை
இரத்தினபுரி.
சாந்தனி. பி. ரந்தெனிய
213, டாகொன்ன,
நீர்கொழும்பு
எல். ரி. வீரரத்தின
வீரரத்தின ஸ்டோர்ஸ்,
டொடன்டுவ.
சுகத் இரத்தினயகா
28/23, ஆனந்த ஒழுங்கை,
மருதானை.
கே எம்.மாலினி சந்திரசிலி
57, குயின் மேரி வீதி,
கம்பஹா.

எம். கி. மும்தாஜ் பேகம்
62/1, கண்டிவீதி கம்பளை
டி. எம். அகமத்
86 பி, வட்டரப்பொல வீதி,
கல்கிசை.
திருமதி. எம். எஸ்.
ரொட்ரிகோ
ஏ 33, மத்துமகே வத்தை
நுகேகொடை
குமுது வருசவிதானை
50, ஸ்டேசன் வீதி,
அம்பலாங்கொடை
எஸ். கே. பொடிநேரிஸ்
29/5, ஹெகின்ன ஒழுங்கை,
வத்தளை.
எம் டி. சேர்த்தி முனசிங்கா
24 பிரதான வீதி, பிலியந்தலை
வி. ஏ. சந்திரிகா தமயந்தி
191/8B மலடொலவத்தை
கடவத்தை
ஏ. எம். ரமீஸ்
பெரிய குடியிருப்பு, கல்பிட்டி
புத்தளம்.
எச் எம் லக்ஷ்மன்
குமாரசிறி
சிசிர மில்ஸ், பனிரெண்டுல
திருமதி. மின்தா
இரத்தினயகா
2, தேசிய வீடமைப்பு,
மகாலியட்ட
கே சிவானந்தன்
தபால் நிலையம், சங்காணை
அஜித் சேனநாயக
''பிரதீபா'', சஞ்சாவெல,
காலி
ஏ அப்துல் ஜவ்ஹர்
கொட்வின் ஹொட்டேல்
பிரதான வீதி, ஒட்டமாவடி
கே. எம் பி ஜயவீர
54, பிரதான வீதி, ஜா-எல.
நிமால் கல்யாணரத்ன
224, ஏ, கொஸ்வின்ன,
கணேமுல்ல
எச். டி. எஸ். பிரேமரத்ன
நிலாந்தட்டிடுவ, ரிடீகம.
ஜே. ஜே ஆர். குணவர்தன
109/17, கொரகாகா வழி,
கொழும்பு 8.
மரியானி பி. பெரேரா
769/1, நீர்கொழும்பு வீதி,
வத்தளை.
டி. ஏ. மகாபட்டுன
ஹெடிகம, பிலியந்தலை.
எம். எம். எம். பைசர்
ஹமீதியா ஹொட்டேல்,
கதுருவல, பொலனறுவை

எல் டி. உபுல் இந்திகா
36, தர்மபால மாவத்தை,
கோட்டே.
ஜி. கே. சி மெனிகே
83, கோவில்வீதி, மகரகம.
தீபா சான்தனி ஜாகொட
உரல்ல, வண்டுரமப, காலி.
கிரியலதா வனசூரிய
35, சாகரிக, மாகல்ல,
காலி
பாத்திமா எவ் தாஹிர்
132/3, ஜும்மா மஸ்ஜித்
லேன், மாளிகாவத்தை.
சாரதா அனுபாமா ஹேரத்
டி 2/1, டிமெல் மாடி,
கொழும்பு 14
மொஹிடீன் சாஹல் அலவி
47, பெரெரா லேன்,
கொழும்பு 6
ஆர் ஏ ரஞ்சித் ரணவீர
மாஹேன, வரக்காப்பொல
டி கே டி தோமஸ்
14, கரவலபிட்டிய சந்தி,
வத்தளை
எல் கே. சமந்தா மல்குமாரி
ஹெம்மாலியா, பத்தேகம
ஜி. எஸ் ராஜபக்ஸ
கப்புகொட, மக்கொன
பிரியதர்ஷனி பெர்ணன்டோ
1/6, பிரதான வீதி,
பத்தரமுல்லை
ஜி. பி சந்திரிகா ஆர்
கனீத்தா
''பிரதீபா''
கொனுகல, இந்துருவ
டபிள்யூ கே பி ஜராலி
பெர்ணன்டோ
கொலிஞ்சாடியா,
வென்னப்புவ.
நிமால் தலதாவததை
80, எம சி வீதி, மாதத்தளை.
லக்ஷ்மன் ஹெடடியாராச்சி
கொட டபொல வடக்கு,
காலி.
எஸ். டி. ஜலீல்
ராவுத்தர் லேன்,
சம்மாந்துறை.
ஜே ஏ. விமலசிரி
டேவல வீதி, மாதப்பத்த,
பிலியந்தல.
கனீதா நாளினி டி சில்வா
460/5, ஹேனவல,
கடுகண்ணுவ.
டி. சதானந்தன்
ஸ்டேசன் வீதி,
கோண்டாவில்.

நிமலா சண்முகம
மாஸலாண்ட, கொஸ்லந்தை
கே. ஏ கீதானி பிரியாங்கிகா
கடடுக்குருந்துவ, ஹபராதுவ.
ஆர் கே சீதா ராஜபக்ஸ
740/ஏ நாவ கவுவ, ரணல்ல
கொழும்பு.
கொத்மல தம்மபாலகாமி
சிறி விமலராம,
அனுத்வத்தை
கிரிமடடியாவ.
கிரியானி ஹிண்டடியா
'சுகத' குருணுகல் வீதி,
நிலாபம்.
பி சிவலிங்கம
78/7 சி, கஸ்தூரியார் வீதி
யாழ்ப்பாணம.
எடவேட அதிகாரம
தம்பிடடிய வடக்கு, வாதுவ.
எஸ். கே ஷியாமனி
மங்கலிக்கா
765/353, அரச மாடி,
மாளிகாவத்தை.
டி கே அத்துகோரளே
வெடிவத்தை மீககாதென்னை.
ஈ சரோஜினி
உலகுடையாய ஒழுங்கை
வலவெடடித்துறை.
டி ஜி சந்திரலால
22 ஜயசிறி மாவத்தை
வெயங்கொடை
ராகுலடி மாரபிடடிய
சிதேவி ஸ்டோர்ஸ்,
சந்தகவீதி, கிரிதிவெல
ஜி எஸ் கே வீரசூரியா
7 ஆஸ்பதிரி வீடு
இகல வலபொல, அங்கொட
என அனோமா டி சில்வா
டபாலி உத்தும மிட்டிய
ஜா எல
கெ ஏ கருணு பெரேரா
343 ரதவன்ன, கம்பஹா
பி ஜி புஞ்சிஹேவர்
31, பைப ரோட்,
கொழும்பு-5
திருமதி நோனு மர்லியா
242/33, முத்துவெல
மாவத்தை கொழும்பு 15
இதூரஸ் பேகம
அபிமாமன்னில்
தலைமனனர் துறை மன்னர்
இநதிரிகா ஜயசூரியா
58, 42வது ஒழுங்கை,
கொழும்பு-6.

ஈ எம புஞ்சிபண்டா
எக்நாயகா
248, கல்தென்ன வீதி,
அம்பிட்டிய.
திருமதி. நில்ல லக்ஷ்மி
சிவபாலன்
கடற்கரை வீதி, 2ம் டிவிசன்,
கல்முனை 2
எஸ் டி. அமிதா பூ
குணரத்தின
306/2 கண்டி வீதி, உஹன்ன.
டபிள்யூ ஜி ரணசிங்க
பண்டா
யட்டியால வீதி, மாவனல்ல
என் எஸ் ஏ எம் லீலாவதி
கோவில் வீதி, கலஎலிய
திருமதி ராணி
செல்லபபிள்ளை
15, அதிசார் வீதி,
மட்டக்களப்பு
முகமட் பளீர்
சி204, பதுளுபிடடியா, பதுளை.
லிலானி கருணரத்தின
''மிகிர'' 9ம் கட்டை
எல்பிடிய.
குமாரி கலகிட்டியாவ
537, குருலுநிக்கேலவ
அனுராதபுர
பிரியா ரன்மல் காமினிரத்ன
இஸ்வெட்டியாவத்த,
நாரம்மல
திருமதி பி சி வில்லியம்ஸ்
219, மொரட்டுவ வீதி,
பிலியந்தலை
சாந்தினி பெரேரா
554, வேபொடவடக்கு,
வேபொட.
ஹெலன் கல்பகே
38, ஞானசிறி மாவததை
வெல்லம் பிட்டிய
கே ஜீ ரம்யசிறி
புத்தகசாலை, டெனியாய

நெஸ்டோமோல்ட
தயாரிப்பாளர்களான
நெஸ்லே லங்கா
லிமிட்டெட ஸ்தாபனத்தார்
நெஸ்டோமோல்ட்
''நெஸ்கியூற்றிற்றி பெக்ட்''
போட்டியிற் கலந்து சிறப
பித்த அனைவருக்கும்
தமது நன்றியைத்
தெரிவிக்கிறார்கள்

HTL NL 1491

நெஸ்டோமோல்ட் உங்கள் வாழ்க்கையைக் கொண்டு செலுத்த உகந்த பானம்

இன்றைய பலன்

மாதம் — ஆனி
திகதி — 19 (03-07-1984)
வாரம் — செவ்வாய்
திதி — பஞ்சமி முன் இரவு 11-47 வரை
நக்ஷத்திரம் — மகம் பிற் பகல் 3-36ன் மேல் பூரம்

மேடம்; திடீர் வரவுகளுக்கும் இடமுண்டு வாழ்க்கையிலும் நல்ல திருப்பம் ஏற்படும் பெரிய இடத்து ஆதரவைத் தேடிக்கொள்வீர்கள் குடும்பத்திலும் சுவையான நிகழ்ச்சிகள் உண்டு.

இடபம்: சுறுசுறுப்பு குன்றும் உமது சொந்த வாழ்க்கையில் மற்றவர்கள் தலையிடுவார்கள் குடும்பத்தில் சிறுபூசல்கள் தோன்றி மறையும் அமைதி நன்று.

மிதுனம்: தாய் வழியால் பெருமைகள் சேரும் தனத்துடன் வாழ்வு கிடைக்கும் எதிரிகள்கூட உங்கள் வரவேற்பார்கள் மருத்துவத்துறையில் ஈடுபடுபவர்களுக்கு இன்று மகத்தான தினம்.

கடகம்; வியாபாரம் செய்வோர்களுக்குஇன்று மகத்தான தினம் பணவிவகாரங்கள் மகிழ்ச்சியை அளிக்கும் புத்திரர் ஒருவரின் வெளிநாட்டுப் பயணத்துக்கு நடவடிக்கை எடுக்கப்படும்.

சிங்கம்: இதயம் எரிமலையாகும் ஏமாற்றத்துக்கு இடமுண்டு எதிரிகள் தாக்குவர் எனினும் இருள் சூழ்ந்த நிலையிலும் ஒளிக்கோடுகள் தென்படலாம்.

கன்னி; களஸ்திர வழியால் நன்மைகள் வந்துசேரும் குடும்பத்தில் தென்றல் வீசும் கவர்ச்சிகரமான நிகழ்ச்சிகளில் ரசிப்பதில் காலத்தை கடத்துவீர்கள் செலவினங்கள் கட்டுப்படியாகவே இருக்கும்.

துலாம்: போட்டா போட்டிகளில் ஈடுபடுவதன் மூலம் பணம் பாழாகலாம் முகமன் கூறுவோர் விடயத்தில் எச்சரிக்கையாக இருக்கவும் விவசாயிகளாயின் இன்று கடன்பட நேரிடலாம்

விருச்சிகம்: பூமியால் லாபமுண்டு புத்திரர் புகழும்சேரும் பொதுசனத் தலைகைக்கான வாய்ப்பும் கிடைக்கும் உடல் நலம் பாதிக்கக்கூடுமாகையால் வாய்வுபதார்த்தங்களை நீக்கிக் கொள்ளவும்.

தனுசு: வியாபாரத்துறையில் புதிய மாற்றத்தை மனம் நாடும் பயன்தரும் பிரயாணம் நண்பர்களின் ஆதரவு இவற்றுடன் தெய்வத்தின் அருளையும் உண்டு சுபதினம்

மகரம்; பொதுத்துறையில் நாட்டம் செல்லும் மக்களின் ஆதரவு கிடைக்கும் அரசியல் வாதிகளுக்கு செல்வாக்குப் பெருகும் பெரிய இடத்து தொடர்பு மூலம் புதிய பாதை திறக்கும்.

கும்பம்: தொழில் புரியும் இடத்தில் கருத்து வேற்றுமைகள் தோன்றக்கூடும் கொடுக்கல் வாங்கல் மூலம் எதிரிகளைத் தேடிக்கொள்வீர்கள் பொருள் விடயத்தில் கவனம் செலுத்தவும்.

மீனம்: பிரயாணத்தில் பொருள் நழுவச்கூடும் திருடர் பயத்திற்கும் இடமுண்டு விவசாயிகள் முன்னெச்சரிக்கையுடன் இருக்கவும்.

திருமலை
வே. ரவீந்திரன்

ஸ்ரீதர் (யாழ். நகர்)
தினசரி 10-30, 2-00, 4-30, 7-00
FRIDAY THE 13th
(adults only)

ராஜா (யாழ். நகர்)
தினசரி 10-30, 2-30, 6-15
ரவிச்சந்திரன் லதா
சொர்க்கத்தில் திருமணம்
(கலர்) புதிய பிரதி

ராணி (யாழ். நகர்)
தினசரி 10-30, 2-30, 6-15
சிவாஜி -சரோஜாதேவி
இருவர் உள்ளம்

ஹரன் (யாழ். நகர்)
தினசரி 10-30, 2-30, 6-30
எம்.ஜி.ஆர் - ஜெயலலிதா
நீரும் நெருப்பும்
கலர்

மனோகரா (யாழ் நகர்)
தினசரி 10-30, 2-30, 6-30
எம்.ஜி.ஆர்- ஜெயலலிதா
தாய்க்குத் தலைமகன்
(புதிய பிரதி)

சாந்தி (யாழ். நகர்
10-30, 2-30, 6-30
ஜெமினி - ஜெய்சங்கர்
அன்புக்கோர் அண்ணன்
(புதிய பிரதி)

வின்சர் (யாழ். நகர்
தினசரி 10-30, 2-30, 6-30
கடைசி வாரம்
எம்.ஜி.ஆர். ஜெயலலிதா
ஒளிவிளக்கு
(புதிய வண்ணப் பிரதி)

லிடோ யாழ். நகர்
தினசரி 10-30, 2-15, 4-30 7-00
FORCE FIVE

வெலிங்டன்
(யாழ். நகர்)
10-30, 2-15, 4-30, 7-00
Today only
THE EMPIRE STRIKE'S BACK
4-7-84 முதல்
YOU LIVE ONIY TWICE

Now Showing
குறிப்பிட்ட சில தினங்கள் மட்டும்
றீகல் (யாழ். நகர்)
10-30, 2-15, 4-30, 6-30
Burt Lancaster.
TWILIGHT'S LAST GLEAMING
பயங்கரவாதிகள் அமெரிக்க ஜனாதிபதியை பணயக் கைதியாக்கிஅவர்உயிருக்கே ஆபத்தை உண்டாக்கும் திகிலூட்டும் சண்டைப் படம்

பஸ்-வான் மோதல் 7 பேர் பலி

சென்னை, ஜூலை,2

திண்டிவனம் பகுதியிலுள்ள நலந்தூர் என்னுமிடத்தில் ஏற்பட்ட பஸ்-வான் மோதலில் 7பேர் பலியாகியுள்ளனர். 4பேர் காயமடைந்துள்ளனர்.

இறந்தவர்கள் அனைவரும் வானில் பிரயாணம் செய்தவர்கள். காயமடைந்தவர்கள் தற்போது மருத்துவ மனையில் அனுமதிக்கப் பட்டுள்ளனர். (சூ)

புதிய விமானப் படை தளபதி

(புதுடில்லி)

இந்தியாவின் புதிய விமானப்படைத் தளபதியாக சி.எம். கத்ரே பதவி ஏற்கவுள்ளார்.

தற்போது இந்துஸ்தான் விமானக் கட்டுப்பாட்டு நிலையத்தின் தலைமைப் பொறுப்பதிகாரியாக இருக்கும் இவர் வரும் செப்டம்பர் மாதத்தில் இப்போதைய விமானப்படைத் தளபதி ஓய்வு பெறுவதனைத் தொடர்ந்து அந்தப் பதவியை வகிக்கவுள்ளார். (சூ)

ரூபவாஹினியில் இவ்வாரத் தமிழ் நிகழ்ச்சிகள்

(கொழும்பு)

இன்று மாலை 6-30 உள்ளூர்த் திரைப்படத் தொடர்-வாடைக்காற்று பாகம் 2.

புதன்கிழமை மாலை 5-30 இதுஉங்கள் நாடு சுகதாச விளையாட்டரங்கு.

வியாழக்கிழமை மாலை 7-15 வாத்தியவிருந்து புல்லாங்குழல் எஸ்ஸரீதாஸ்-

வெள்ளிக்கிழமை மாலை 6.00 விளையாட்டுப் பயிற்சி.

கோரிக்கை

[பண்டத்தரிப்பு]

மானிப்பாய் இந்துக் கல்லூரியில் கணிதம், இரசாயனம், சமூகக் கல்வி ஆகிய பாடங்களை கற்பிப்பதற்கு போதுமான ஆசிரியர்கள் இல்லையென்றும் இந்த ஆசிரியர் பற்றுக்குறையை நிவர்த்தி செய்து தருமாறும் கல்லூரி பாடசாலை அபிவிருத்திச் சங்கம் யாழ் கல்விப் பணிப்பாளரிடம் மகஜர் ஒன்றின் மூலம் கோரிக்கை விடுத்துள்ளது.

தற்கொலை

(கிளிநொச்சி)

நோயினால் அவதிப்பட்ட வயோதிபர் ஒருவர் வாழ்வில் விரக்தி கொண்டு கழுத்தில் சுருக்கிட்டு தற்கொலை செய்து கொண்டார்.

கோணவில் வசித்து வந்த கறுப்பன் முத்து (65 வயது) என்பவரே மரணமானவரா வார். இம் மரணம் தொடர்பான மரண விசாரணையை கிளிநொச்சிப் பகுதி மரண விசாரணை அதிகாரி மு. யோகலிங்கம் மேற்கொண்டார்.

மரணமானவரின் மகன் மு. முத்தையாவும் சாட்சியமளித்ததை தொடர்ந்து மரணவிசாரணை அதிகாரி தற்கொலை என்று தீர்ப்பு வழங்கினார்.

"விளையாட்டு ஒருவனை முழுமனிதனாக்குகிறது"

(சித்தன்கேணி)

"ஒருவன் வாழ்க்கையில் முழுமனிதனாவதற்கு விளையாட்டு பெரிதும் உதவுகின்றது. விளையாட்டுத்துறை ஒருவரை ஒருவர் புரிந்து கொள்வதற்கும் மற்றவர்களுக்கு விட்டுக் கொடுக்கும் மனப்பான்மையும் பெற ஏதுவாக இருக்கின்றது".

இவ்வாறு சங்கானை உதவி அரசாங்க அதிபர் திரு. து. வைத்திலிங்கம் வட்டுக்கோட்டை இந்துக்கல்லூரி வருடாந்த விளையாட்டுப் போட்டியில் புரதம விருந்தினராக கலந்து கொண்டு உரையாற்றுகையில் குறிப்பிட்டார்.

கல்லூரி அதிபர் திரு. என். வேலுப்பிள்ளை தலைமையில் நடைபெற்ற இவ்விளையாட்டுப்போட்டியில் வெற்றி பெற்றவர்களுக்கு உதவி அரசாங்க அதிபர் பரிசுகளை வழங்கினார்.

உதவி அரசாங்க அதிபர் தொடர்ந்து உரையாற்றுகையில் "சமுதாயம் இளம் சந்ததியினரை நாளைய உலகம் என ஏற்றுக்கொள்ளும் போது பண்புள்ள அறிவுள்ள குணநிதி சயங்களை உடைய இளைஞர் களையே எதிர்பார்க்கின்றது. உள்ளம் வளர்ச்சியடைய கல்வியும் உடல் வளர்ச்சிக்கு விளையாட்டுப்பயிற்சிகளும் உரமூட்டுகின்றன. விளையாட்டு ஒருவனை முழுமனிதனாக்கி சமுதாயத்துக்கு உதவும் ஓர் உத்தமனாக்குகின்றது. ஆதலால் ஒவ்வொருவரும் குறைந்தது ஒரு விளையாட்டிலாவது நல்ல பயிற்சியுடையவர்களாக இருக்க வேண்டியது அவசியமாகும்" என்றார். (சூ)

ஓய்வுபெற்றார்

(பண்டத்தரிப்பு)

மாதகல் புனித தோமையப்பர் ரேமன் கத்தோலிக்க மகளிர் வித்தியாலயத்தில்கடந்தபலவருடகாலமாகக் கடமையாற்றிய ஆசிரியை திருமதி எம்.ரி.அருளானந்தம் இம் மாதம் தொடக்கம் பதவியிலிருந்து ஓய்வு பெற்றுள்ளார் பாடசாலை ஆசிரியர், மாணவர்கள் சார்பில் இவருக்கு சிறப்பான முறையில் சேவை நலம் பாராட்டு விழா நடத்தப்பட்டது.

சித்திரத் தேர்

(கோண்டாவில்)

கோண்டாவில் கிராமத்தில் கோயில் கொண்டெழுத்தருளியிருக்கும். ஆசிமட அரசடி விநாயகப் பெருமானின் வருடாந்த மகோற்சவம் சென்ற ஜூன் 26ம் திகதி துவஜாரோகணத்துடன் ஆரம்பமாகியது. இம் மாதம் 4ம் திகதி புதன்கிழமை பகல் பத்து மணிக்கு விநாயகப் பெருமான் சித்திரத் தேரில் எழுத்தருளி வீதிவலம் வருவார். நாளை மறு நாள் 5ம் திகதி வியாழக்கிழமை ஆனி உத்திர திருத்தில் மாலை ஐந்து மணிக்கு தீர்த்தத்திருவிழா நடைபெறும்.

தீர்த்தத்திருவிழா அன்றுகாலை 7-மணிக்கு இலங்கைவானொலி தேசிய ஒலிபரப்பில் மேற்படி ஆலய ஊஞ்சல் பாடல்கள் ஒலிபரப்பாகும். (ப)

கலர் பிலிம் சுருள்களை Processing & Printing, 24 படங்களுக்குக் குறையாது செய்து கொண்டால், ஒரு கலர் பிலிம் சுருள் இனாமாக வழங்கப்படும், Processing ரூபா 30/- Printing. P.C ஒருபிரதி ரூபா 6.50,
கொழும்பு ஸ்ரூடியோ

குறேஸ் ட்ரவல் சேவிசஸ் பிறைவேற் லிமிட்டெட்
(CROSS TRAVEL SERVICES (Pte) LTD.)
ஸ்தாபனத்தாரின் மற்றுமோர் சேவை :-
குறேஸ் சர்வதேச தொலைத்தொடர்பு சேவை
(Cross International Telecommunication Services)
FOR ALL INTERNATIONAL AND LOCAL DIRECT DIALLING TELEPHONE CALLS.
INTERNATIONAL TELEX SERVICES :- NO DELAY AT ALL, CHEAP RATES. CONTACT US RIGHT NOW.
குறேஸ் சர்வதேச தொலைத்தொடர்பு சேவை.
(i) சர்வதேச, உள்ளூர் நேரடி தொலைத்தொடர்பு சேவை.
(ii) சர்வதேச ரெலெக்ஸ் சேவை.
உலகின் எப்பாகத்திற்கும குறைந்த கட்டணத்தில் நேரடிச் சர்வதேச தொலைத்தொடர்பு சேவையும், ஒரு நொடிப்பொழுதில் பெற்றுக்கொள்ள உடன் நாடுங்கள்
CTS
Cross International Telecommunication Services
STAGE II, FIRST FLOOR, BUS STAND CENTRE ROAD, MODEL MARKET, JAFFNA.
Phone No: 22040, 22065. Telex No: 22207 (C, T, S,)

குழந்தைக்கு உரிமைகோரி கோர்ட்டில் நடந்த 'இழுபறி'

தந்தையிடம் ஒப்படைக்க நீதிபதி தீர்ப்பு

(மாவிட்டபுரம்)

மல்லாகம் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்ட மனு வொன்றின் விசாரணையின் போதுஒருவயது நிரம்பிய குழ ந்தையொன்றை அக்குழந்தை யின் தாயாரின் பெற்றோர் மறுபுறமும் அக்குழந்தையின் தந்தை ஒரு புறமும் நின்று உரிமை கோரினர். இறுதியில் தந்தைக்கே குழந்தை உரி மையுடையது என நீதிபதி தீர்ப்பு வழங்கினர்.

அச்சுவேலி தெற்கைச் சேர் ந்த திருவிளங்கம் பாலச்சந் திரன் என்பவர் சட்டத்தரணி ஆர். ஜே. செல்வரத்தினத் மூலம் மல்லாகம் நீதிமன்றத் தில் மனுவொன்றை தாக்கல் செய்திருந்தார்.

ஊரெழு கிழக்கைச் சேர்ந்த கனகசுந்தரம் கலாவதியை தாம் திருமணம் செய்த தாகவும் தமக்கு கலாதரன் என்னும் ஆண் குழந்தை யொன்று பிறந்ததாகவும் அதன்பின் தமதுமனைவி மரண மாகி விட்டதாகவும் பின்னர் மனைவியின் பெற்றோர் தனை வீட்டிலிருந்து வெளியேற்றிய தாகவும் தமது குழந்தையை தரமுடியாதென கூறியதாக வும் மேற்படி மனுவில் குறிப் பிட்ட மனுதார் தமது குழந் தையை தம்மிடம் பெற்றுத் தருமாறும் விண்ணப்பித்திருந் தார்.

இதற்கு எதிர் மனுதாரர்க ளான ஊரெழு கிழக்கைச் சேர்ந்த கந்தையா கனகசுந்த தரம் அவர் மனைவி இலட்சுமி குழந்தை கலாதரன் ஆகி யோர் சார்பில் தாக்கல் செய்யப்பட்ட பதிலில், மனு தார் ஓர் அரச ஊழியரா கையால் இக்குழந்தையை சரி யான முறையில் பராமரித்து வளர்க்க முடியாதென்பதை கூட்டிக்காட்டி எதிர் மனு தாரர்களான தாம் இக்குழந் தையை வளர்க்க தகுதியு டையவர்களெனவும் குறிப் பிட்டு மனுதாரின் விண்ணப் பத்தை நிராகரிக்கும்படியும் கோரியிருந்தனர்.

இந்த மனுவின் விசாரணை மல்லாகம் நீதிமன்றத்தில் எடுக்கப்பட்டசமயம் மனு தார் சார்பில் சட்டத்தரணி ஆர். ஜே. செல்வரத்தினம் குழந்தையை மனுதாரிடம் ஒப் படைக்கவேண்டுமெனக கோரி னர்.

ஒரு குழந்தை அதன் தாய் தந்தையருக்கே உரிமையுடை யது. இக்குழந்தையின் தாயார் இறந்துவிட்டதால் தந் தைக்கே உரிமையுடையது. இக்குழந்தையைப் பேணிப் பாதுகாத்து வளர்க்கச் சகல வசதிகளும் மனுதாரிடம் உண்டு ஆகவே அவரிடமே குழந்தையை ஒப்படைக்க வேண்டும் எனச் சட்டத்தரணி செல்வரத்தினம் வாதிட்டார்.

சட்டத்தரணிகள் திரு. பர ராஜசிங்கம், திரு. அம்பிகை பாலன் ஆகியோர் இதனை எதிர்த்து வாதிட்டனர்.

இறுதியில் நீதிபதி திரு. சீ. வீ. விக்னேஸ்வரன் குழந்தை மனுதாரான தந் தைக்கே உரிமையுடையது என்று கூறி அவரிடமே குழந் தையை ஒப்படைக்குமாறு உத் தரவிட்டார்.

மனுதார் சார்பில் சட்டத் தரணி ஆர் ஜே. செல்வரத்தி னத்துடன் சட்டத்தரணி ரி. பாக்கியநாதனும் ஆஜரானர். எதிர்மனுதார்கள் சார்பில் சட்டத்தரணிகள் திரு. பர ராஜசிங்கம், திரு. அம்பிகை பாலன் ஆகியோர் ஆஜராகி னர்.

கூட்டுத்தலைமை...

(1ம் பக்கத் தொடர்ச்சி)

தாகவே நேற்றுமுன்தினம் முடிவடைந்தது.

முக்கியமான பிரச்னைகள் ஆராயப்பட்டு, தீர்மானங் களும் சச்சரவின்றி ஏகமன தாக நிறைவேற்றப்பட்ட தனுடனே இரண்டு நாட் களுடன் மகாநாடுமுடிவடைந் தது.

கூட்டுத்தலைமை பற்றிய பிரேரணையை திரு. வே யோகேஸ்வரன் முன்மொழிய, திரு. எஸ். சந்திரகாசன் வழி மொழிந்தார்.

குடியியல் அரசியல் உரிமை களைப் பாதுகாக்க 'சர்வதேச தமிழர் நிலையம்' அமைக்கப் படவேண்டும் என்று டாக்டர் பஞ்சாட்சரம் கொண்டு வந்த தீர்மானமும் ஏகமனதாக நிறைவேறியது. இத்தீர்மானத்தை திரு. எம். தில்லையம்பலம் வழிமொழிந் தார், இந்த நிலையம் அமைப் பது தொடர்பாக ஆராய செயற்குழு ஒன்றும் உடனடி யாக அமைக்கப்பட்டது- இக் குழுவில் திருவாளர்கள் என். சத்தியேந்திரா, எஸ். சந்திர காசன், பி: நெடுமாறன், சச்சி பொன்னம்பலம் ஆகியோர் இடம் பெற்றுள்ளனர். தமிழர் விடுதலை கூட்டணி சார்பில் ஒருவர் இக்குழுவில் நியம னம் பெறுவார்.

இவைதவிர. டாக்டர் ஜனர் த்தனன், டாக்டர் ஜெகதீசன் ஆகியோர் கொண்டு வந்த தீர்மானங்களும் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டன.

மனிதரை

(4-ம் பக்கத் தொடர்ச்சி)

உணர்ச்சியேஅவளுக இருக்கின் றவர். என் உணர்வு அது ஆய ஒருத்தன்' என்றார். ஒருத்தன் தனக்கு நிகர் இல்லாதவன். பெண்களுடைய நோக்கு மான் கண்ணை உவமை கூறுவது வழக் கம். அம்பிகையின் நோக்கம் மென்மையாக இருக்கிறது. அடியார்களைப் பார்க்கிற பார் வையில் அவர்கள் உள்ளம் குளி ரும்படிநோக்குகிறாள். அதனால் மான் பழித்து ஆண்டமென் நோக்கி என்றார். அந்தப்பெரு மாட்டியைத் திருக்கல்யாணம் செய்து கொண்டவன் இறை வன். எனவே, மென் நோக்கி மணாளன்' என்றார். 'அவனை வந்து அருள் செய்யும்படி கூவு வாயாக' என்கிறார். 'நீ வரக் கூவாய்.'

கூட்டுறவு...

(1ம் பக்கத் தொடர்ச்சி)

டுறவுச் சங்கத்தின் ஊழியர் தொழிற்சங்க உறுப்பி னர்மத்தியில் மேற்படிதொழிற் சங்கத் தலைவர் திரு. லோக நாதன் உரைநிகழ்த்தினர்.

யாழ்ப்பாண சங்கத்தைப் பொறுத்தவரையில் தொழிற் சங்கம் சமர்ப்பித்த கோரிக் கைகளில் சில நிறைவேற்றப் பட்ட போதிலும் பெரும்பா லானவை இன்னமும் நிறை வேற்றப்படவில்லை என்றும், மேற்கொண்டு தொடர்பான போராட்டம் ஆரம்பிக்கப் போவதாகவும் அதற்கு மேற் படி தொழிற் சங்கத்தைச் சேர்ந்த சகலரும் ஒத்துழைப்பு வழங்கவேண்டும்என்றும் அவர் கேட்டுக்கொண்டார்.

வேலை நிறுத்தம் வெற்றிய டைய உழைத்த ஊழியர்களுக் கும் திரு லோகநாதன் பாராட் டுத் தெரிவித்தார்.

கூட்டுறவு ஊழியர் தொழிற் சங்கத்தில் சேராத சிலப.நோ. கூ. சங்கங்கள் வேலை நிறுத் தத்தில் கலந்துகொள்ளவில்லை.

வடக்கு - கிழக்கு மாகாணங் களில் சுமார் 2,200 தொழிற்ச் சங்ஊழியர்கள் வேலை நிறுத் தத்தில் கலந்து கொண்டதாக வும் ப.நோ கூ.ச.கிளைநிலையங் கள் மூடப்பட்டதால் பொது மக்களுக்கு ஏற்பட்ட சிரமத்துக்கு மன்னிப்புக்கோரு வதாகவும் அவர் சொன்னார்.

தொழிற் சங்க ஊழியர்கள் தங்கள் சங்கங்களின் முன்னிலை யில் நேற்றுப்பகல் குழுமி நின் றதைச் காணக்கூடியதாக இருந்தது. எந்தவித அசம்பா வித சம்பவங்களும் இடம்பெற வில்லை.

கிளிநொச்சியில்

(கிளிநொச்சி)

கிளிநொச்சி கரைச்சி வடக்கு பலநோக்குக் கூட்டுறவுச் சங் சங்கக் கிளைகள் அனைத்தும் வேலைநிறுத்தத்தில் ஈடுபட் டுள்ள அதேவேளையில் கரைச்சி தெற்கு பலநோக்குச் கூட்டுற வுச் சங்கக்கிளைகள் அனைத்தும் வேலைநிறுத்தத்தால் பாதிக்கப் படாமல் வேலைகள் வழமை போல் நேற்று நடைபெற்றன.

தாய்ச்சங்கத்தின் பணிப்பு ரையை அடுத்து கிளிநொச்சி கரைச்சி வடக்கு பலநோக்குக் கூட்டுறவுச் சங்க ஊழியர் கள் அனைவரும் நேற்று ஒரு நாள் அடையாள வேலை நிறுத் தத்தில் ஈடுபட்டனர். 28 கிளை களில் வேலை நிறுத்தம் நடை பெற்றது.

இதேசமயம் கரைச்சி தெற்கு பலநோக்குக் கூட்டுறவுச் சங் கக் கிளைகள் யாவும் திறக்கப் பட்டு பணிகள் நடைபெறுவ தாக மேற்படி சங்கத்தின் பொதுமுகாமையாளர் திரு. பேராயிரவர் தெரிவித்தார். வேலை நிறுத்தத்துக்கும் சங்கத் துக்கும் எதுவிதத் தொடர்பும் இல்லையென்றும் இவ்வூழியர் கள் எவரும் வேலை நிறுத்தம் செய்யும் சங்கத்தின் அங்கத்த வராய் இல்லையென்றும் அவர் தெரிவித்தார்.

ஊர்காவற்றுறை, நெடுந்தீவு, அளவெட்டி, தெல்லிப்பழை. கரவெட்டி, பச்சிலைப்பள்ளி, பலநோக்குக் கூட்டுறவுச் சங்க கிளைகள் நேற்று இயங்கியதாக தெரிவிக்கப்பட்டது.

இப்படியும் கூடக்கீறது

இது ஒரு குட்டிக் கதை. அல்ல. உண்மைச் சம்பவம்:

நெல்லியடியிலிருந்து நேற்றுக் காலை சுமார் 7-15க்கு ஒரு பஸ், யாழ்ப்பாணத்தை நோக்கிப் புறப்படுகிறது. கடுகதி வேகத்தில் பஸ் வந்துகொண்டிருக்கிறது.

பஸ் பிரயாணிகளில் ஒரு இளைஞனும் இருந்தான்.

பஸ், காலை சுமார் 8-15 மணியளவில் யாழ்ப்பாணம் வந்து சேர்ந்ததும் பஸ்ஸிலிருந்து எல்லோரும் இறங்கு கின்றனர். அந்த இளைஞனும் இறங்குகின்றான். ஆனால் அவனுக்கு ஓர் சந்தேகம்.

அவனது சட்டைப் பையினுள் ஒரு அணுமதேய 'என் வலப்', அதுவும் ஓரளவு பாரமாக இருப்பதை அவன் உணர்கின்றான். தனிமையில் சென்று என்வலப்பை' பிரித் ததும் பாம்பை மிதித்ததுபோன்ற பிரமை!

நேராக யாழ்ப்பாணம் பொலிஸ்நிலையம் சென்று உயர் அதிகாரியுடன் தொடர்புகொள்கின்றான். முறைப்பாடு பதிவுசெய்ய பட்டு, அந்த 'என்வலப்' பொலிஸ் பாது காப்புக்குச் செல்கிறது.

அந்த என்வலப்பில் இருந்தது என்ன தெரியுமா? கத்தை கத்தையான பெறுமதிமிக்க ரூபா நோட்டுக்கள்! உரிய வர்கள் யாழ். பொலிஸ் அதிபருடன் தொடர்புகொள்ள லாம்.

-ஊடகுருவி

காஷ்மீர்...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

பட்டுவிட்டதால் அங்கு ஏற் பட்டுள்ள பதட்டத்தைத் தொடர்ந்து ஊரடங்குச் சட் டம் பிறப்பிக்கப்பட்டுள்ளது.

அரசுக்கு ஆதரவான 12 உறுப்பினர்கள் வெளியேறிய தனால் ஆளும்கட்சி பெரும் பான்மைப் பலத்தை இழந்த தைத்தொடர்ந்தே சட்டசபை கலைக்கப்பட்டுள்ளது.

இந்திரா-ஜே. ஆர்.

(1ம் பக்கத் தொடர்ச்சி)

தமிழ் மக்கள் பெரும்பான் மையாக வாழும் வடக்கு கிழ க்கு பகுதிகளில் இருந்து தெரிவு செய்யப்படும் உறுப் பினர்கள் மூலம் இரண்டா வது நாடாளுமன்ற அவை ஒன்றை அமைப்பதன மூலம் பிரச்னைக்குத் தீர்வுகாண்பது குறித்து சர்வகட்சி மாநாட் டில் விரிவாக ஆராயப்படும் என்று தெரிவித்த திரு. ஜெய வர்த்தனை, இந்த நாடாளு மன்ற அவை குறித்து விபரம் வெளியிட மறத்துவிட்டார்.

வெளிநாட்டு உதவிகளுடன் அடிக்கடி மேற்கொள்ளப்படும் பயங்கரவாத சம்பவங்களால், சிங்கள மக்களுடன் நீண்ட காலமாக ஒற்றுமையாக இரு ந்து வரும் தமிழ் மக்களுக்கு பாதகமான சூழ்நிலைகளைத் தோற்றுவிக்கின்றது என்றும் அவர் கூறினார்.

இந்தியாவில் குறிப்பாகத் தமிழ்நாட்டில் இலங்கைக்கு எதிராகப் பகைமைப் பிரச் சாரம் செய்யப்படுவதுகுறித்து இந்தியப் பிரதமரின் கவனத் துக்குக் கொண்டு வந்ததாக வும் திரு. ஜெயவர்த்தனை கூறி னார்.

பிரதமரின் இந்தியாபற்றிய உரை:

"பழையவற்றை மறப்போம் மன்னிப்போம்" — ஜனதிபதி

(புதுடில்லி)

இலங்கைப் பிரதமர் திரு. ஆர். பிரேமதாசா இந்தியா பற்றி அண்மையில் பாராளு மன்றத்தில் நிகழ்த்திய உரை குறித்து ஜனதிபதி திரு. ஜே. ஆர் ஜெயவர்த்தனே கருத்து வெளியிட்டபோது "பழைய வற்றை மறப்போம்; மன்னிப் போம்" என்று கூறினர்.

இலங்கை ஜனதிபதி நிருபர் கள் மத்தியில் உரையாற்றிய போது, நிருபர் ஒருவர் கேட்ட கேள்விக்கு பதிலளிக்கையில் "பிரதமர் திரு. பிரேமதாசா பாராளுமன்றத்தில் நிகழ்த்திய உரைகுறித்து பின்னர் விரிவான அறிக்கை ஒன்றை அவர் வெளியிட்டார். எனவே பழையவற்றை மறந்துவிடு வோம்" என்றார்.

முத்துமாரி அம்பாள் தேர் நாளை

(யாழ்ப்பாணம்)

திருநெல்வேலி முத்துமாரி அம்மன் ஆலயத்தின் தேர்த் திருவிழா நாளை புதன்கிழமை பிற்பகல் நடை பெறவுள்ளது.

தீர்த்தோற்சவம் அடுத்த நாளும், அதற்கடுத்த நாள் பூங்காவன உற்சவமும் நடை பெறவுள்ளது.

'சரத்'துக்கு நகர மண்டபத்தில் வரவேற்பு

(யாழ்ப்பாணம்)

கலவானை எம். பியும் கம் யூனிஸ்ட் கட்சியின் அரசியல் குழு அங்கத்தவருமான திரு. சரத் முத்தெட்டுவேகம இம் மாதம் 12ம் திகதி யாழ்ப்பா ணத்திற்கு விஜயம் செய்கிறார். அவருக்கு யாழ்ப்பாணம் நகர மண்டபத்தில் வரவேற்பு அளிக்க ஏற்பாடு செய்யப்படு கின்றது.

கம்யூனிஸ்ட் கட்சியின் பொதுச் செயலாளர் திரு. கே பி. சில்வாவும் அன்றையதினம் பொதுக் கூட்டத்தில் உரை நிகழ்த்தவுள்ளார்.

தேசிய சிறுபான்மை யோரை எதிர் நோக்கியுள்ள பிரச்னைகளும் அவற்றிற்கு கம்யூனிஸ்ட் கட்சி முன்வைக் கும் திட்டங்களும் பற்றி விளக்குவார்.

ஸ்தாபகர் தினமும் இல்ல விளையாட்டும்

(யாழ்ப்பாணம்)

மானிப்பாய் இந்துக் கல்லூரி யின் ஸ்தாபகர் தினமும், வரு டாந்த இல்ல விளையாட்டுப் போட்டியும் நாளை புதன்கிழ மை பிற்பகல் 2.15 மணிக்கு நடைபெறும்.

கல்லூரி மைதானத்தில் நடைபெறும் இவ்விழாவில் பிரதம விருந்தினராக சட்டத் தரணியும் சமாதான நீதவா னுமாகிய இராசேந்திரன் கலந்து கொள்வார்.

மரண அறிவித்தல்

சின்னையா கந்தையா

ஊரெழு கிழக்கைச்சேர்ந்த சின்னையா கந்தையா கால மானார். இவர் கண்மணியின் அன்புக் கணவரும், ஜெய தேவன்(கனடா), மகேந்திரம் (பிரான்சு), திருச்செல்வி, சரோஜினிதேவி, சிவகுமார், சாந்தன், ஜெயக்குமார் ஆகியோரின்அன்புத்தந்தையும்சுந்தரலிங்கத்தின்(பயிர்ச் செய்கை உத்தியோகத்தர் பூநகரி) மாமனாரும் ஆவார். அன்னாரின் பூதவுடல் ஈமைக்கிரியை ஊரெழு பொக் கணை மயானத்தில் 3-7-84 பிற்பகல் 4-00 மணிக்கு நடைபெறும். உற்றார், உறவினர், நண்பர்கள் இவ்வறிவித்தலை ஏற்றுக்கொள்ளவும்,

"குமரபுரி" ஊரெழு கிழக்கு சுன்னாகம். 601

இப் பத்திரிகை 'ஈழநாடு' லிமிட்டெட் ஸ்தாபனத் தாரால் யாழ்ப்பாணம், சிவன்கோவில் மேற்கு வீதி, 63ம் இலக்க அச்சகத்தில் 1984ம் ஆண்டு ஜூலை மாதம் 3ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது. Registered as a News Paper at the General Post office Sri Lanka under number B 100236/81 Eelanadu P. o. Box 49, Telegram Eelanadu, Telephone: 22389 — 24126.